10வது ஆண்டில்

விளம்பரம்™
VLAMBARAM™

(416) 282-8059
(416) 282-4978

# உலக தமிழோசை®
ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 10 | FEBRUARY 01, 2000 | பாலம் 03


- ❊ வாகனப் பரீட்சையில் சித்திபெற சில வழிகள் (பக். 8)
- ❊ வீடு வாங்குபவர்களின் கவலைகள்? (பக். 17)
- ❊ அம்பிகாபதி அமராவதி.... (பக். 12)
- ❊ 1999 இன் சிறந்த உதைபந்தாட்ட வீரர் (பக்.6)
- ❊ ரஜினியை - சில்வெஸ்டர் ஸ்டாலினுடன் எனலாமா (பக். 7)
- ❊ RRSP இன் நன்மைகள் (பக்.11)
- ❊ இவைன் என்பது ஒரு சக்தியா? நம்பிக்கையா (பக். 5)
- ❊ உலக நேரம் அறியக்கூடிய கைக்கடிகாரம்(பக்.2)



## வீடு விற்பது, வாங்குவது

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.
RE/MAX Crossroads Rlty Inc.

## இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்

சபோனாவிற்கு!
Sabona & Gift

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

Markham / Eglinton

(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)


## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

- ☞ மஹா சக்தியை ஆராதிப்பவனுக்கு சக்தி உண்டாகிறது.
- ☞ சீரான நிறைகோல் பண்டங்களின் நிறையை உள்ளபடி எடுத்துக் காட்டும். நடுவு நிற்கும் மனது உண்மையை உள்ளபடி உணர்கிறது
- ☞ தோல்வியென்பது மனநிலையைப் பொறுத்தது. எல்லாச் செயல்களினின்றும் பாடம் கற்பவனுக்குத் தோல்வியில்லை.
- ☞ அருள் நிறைந்த மக்கள் மனிதனுடைய செயலை மதிப்பிடுகின்றனர். அருள் நிறைந்த சான்றோர் மனதின் இயல்பை மதிப்பிடுகின்றனர்.
- ☞ சத்தியமும் சீலமும் உடையவன் சான்றோன் ஆகிவிடுகிறான். ஆத்ம சக்தி அவனிடத்திருந்து தோன்றுவதாகும்.

உலக நாடுகள் வரிசையில் தென் அமெரிக்க நாடுகள்

## வெனிசுலா (Venezuela)

வடக்கே கரிபியன் கடலையும் மேற்கே கொலம்பியா, கிழக்கே, கஜானா, தெற்கே பிரேசில் ஆகிய நாடுகளை எல்லையாக தென் அமெரிக்காவில. அமைந்திருக்கும் நாடே 'வெனிசுலா' ஆகும்.

**பரப்பளவு:** 3,52,144 ச. மைல்

**மொத்த குடித்தொகை:** 18,883,000பேர்
1992ஆம் ஆண்டில் புள்ளிவிபரப்படி)

**தலைநகரம்:** கராகஸ் [Caracas] நாட்டின் வடக்கு எல்லையாக கரிபியன் கடற்கரையில் இதன் தலை-நகரம் அமைந்துள்ளது)

**சுதந்திரம்:** யூலை 5, 1811 ஸ்பெயின் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் கிடைத்தது.

**மொழி:** ஸ்பானிஷ், மனற்றும் புராதன பாணியில் அமைந்த மொழிகள்.

**சமயம்:** ரோமன் கத்தோலிக்கர் - 96%
கிறிஸ்தவர் - 2%

பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர் வாக்குரிமை

(தொடர்ச்சி 12பக்கம்)

## உன்னை அறிந்தால்

அமெரிக்காவில் ஐரோப்பியர் குடியேறினார்கள், 1985 அளவில் கனடாவில் அதிகளவில் தமிழர்கள் குடியேறத்தொடங்கினார்கள். இதை ஆரம்பகாலங்களில் அனேகமானவர்கள் 18, 16, 15... என நிறைந்த மணித்துளிகள் தொழில் புரிந்தார்கள். சிலர் எம்மில் இப்பவும் தொடர்கிறார்கள். அப்படி அதிகநேரம் தொழில் புரியும் போது தான் எமது வருமானம் அதிகரிக்கும். அடிப்படைத் தேவைகளுடன் மேலதிகமாக சில அலுவல்களை செய்ய ஆரம்பிக்கின்றோம். ஐரோப்பியர்களின் ஆரம்ப கட்டமும் ஓரளவு இவ்வாறே இருந்தது. அவர்கள் தங்களை எவ்வாறு முன்னேற்றிக் கொண்டார்களோ, அதேமாதிரி, நாமும் நம்மை முன்னேற்ற வழிவகைகளைக் காணல் வேண்டும். உதாரணத்திற்கு ஒருவர் இருவர் என சிறிய உணவகம், சிறு கடைகள், சிறிய தொழிற்சாலைகளுடன் நிற்காமல் கூடிய எண்ணிக்கையாளர்களின் கூட்டு முயற்சிகளினால் பெரிய திட்டங்களை உருவாக்கி, செயல்படுவதால் ஒரு சிறப்பான ஆரோக்கியமான பொருளாதாரத்தை உருவாக்க முடியும். அடம்பன் கொடியும் ஒழுங்காக திரண்டால் அதன் பலமும் பலமே. பல கைகள் சேரும்போதுதான சத்தம் பலமாக இருக்கும். **சிந்திக்கவும்... செயல்படவும், வெற்றி நமதே!!**

***நெற்றிக்கண்ணன்***


விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SUNDAYS ✡ 7:30 PM



SINGAPORE PAGING

$25.00 +Taxes 200min/Month

$100. FREE PAGER Incl. 1YEAR SERVICE

Nokia 6188 with VIB

CANTEL
Bell Mobility

$50.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 200min இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 12.5 சதம் மட்டுமே

Mobile Message, Call Forwarding, Call Display per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378

HOTLINE: (416) 980-1234

## துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



## சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr. , Scarborough, Ont.


VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978



# அறிவும் ஆக்கமும் (50)

-விஜே குலத்துங்கம்

புதிய Millennium அல்லது புத்தாயிரம் தொடங்கிவிட்டது என கூறமுடியாது. ஆண்டுகள் எண்ணத் தொடங்கும் போது 0 இல் எண்ணத் தொடங்கவில்லை. 1Sம் ஆண்டு என்றீதர் எண்ணத்ச தொடங்கப்பட்டது. எனவே 2000 ஆண்டு முடிந்தபின் அதாவது 2001ஆம் ஆண்டுதான் புத்தாயிரம் அல்லது புதிய Millennium ஆரம்பிக்கும். சரி அது ஒருபுறம் இருக்க கடந்த 1999ஆம் ஆண்டுகளில் எவ்வளவு தூரம் விஞ்ஞானம் முன்னேறி உள்ளன என்று பார்ப்போம். விஞ்ஞானத்தை நம்பி அதில் முன்னேறிய நாடுகள்தான் தற்போது பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்து உள்ளன. அஞ்ஞானம் என்று சொல்லிக் கொண்டு அதை நம்பி வாழ்ந்த நாடுகள், முன்னேற்றம் அடைந்த நாடுகளுடன் உதவிப்பணத்திற்காகவும், மற்றைய உதவிகளுக்குமாக கையேந்த நிற்கின்றன. அதுமாத்திரம் அல்லாது விஞ்ஞானத்தை நம்பி வாழ்ந்த நாடுகளின் கண்டுபிடிப்புக்களிலும் உற்பத்திகளிலும் தங்கியிருந்து அவற்றை அனுபவித்து வருகின்றன. எப்படி இருப்பினும் பழைய காலத்தை விட மக்கள் மூடநம்பிக்கைகளை விட்டு, முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

கடந்த 1000ஆண்டுகளின் முன்னேற்றத்தை சுருக்கமாகக் கூறப்போனால் உலகம் சுருங்கி விட்டது என கூறலாம். ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கு போக வேண்டுமானால் பல மாதங்களாக பாய்மரக் கப்பலில் போன காலங்கள் போய் தற்போது சில மணத்தியாலங்களில் ஜெற் விமானத்தில் செல்லக்கூடியதாக உள்ளது. உலகத்தின் ஒரு மூலையில் இருந்து மறுமூலையில் இருக்கும் ஒருவருடன் பக்கத்தில் இருந்து கதைப்பது போல் தெளிவாக பேச முடிகின்றது. அத்துடன் பல நாடுகளிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை வீட்டில் இருந்து தொலைகாட்சியில் பார்க்கக் கூடியதாக உள்ளது. கடந்த காலங்களில் நடந்த கண்டுபிடிப்புக்ளில் மிகவும் சிறந்தது என கருதப்படுவது தொலைபேசிதான். இதைத்தொடர்ந்து வெகுசனதொடர்பு சாதனங்களாக வானொலி, தொலைகாட்சி, இன்டர்நெற் என வளர்ச்சி அடைந்தது. வைத்தியத் துறையும் மிகவும் வளர்ச்சியடைந்து உள்ளது. 200 ஆண்டுகளுக்கு முன்னர் சராசரி வயது 35 வருடங்கள் ஆக இருந்தது. அது தற்போது வளர்ச்சியடைந்த நாடுகளில் 80 ஆக அதிகரித்துள்ளது கடந்த 1000 ஆண்டுகளாக நடந்த விஞ்ஞான வளர்ச்சிகள் பற்றி வாசகர்கள் அறிந்திருப்பார்கள். எனவே கடந்த ஆண்டில் கண்டுபிடக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட சாதாரண பாவனைப் பொருட்கள் சிலவற்றைப் பற்றிப் பார்ப்போம்.

எல்லா வீடுகளிலும் இருக்கும் ஒரு பாவனைப் பொருள்தான் Microwave ஆகும். இது உணவுப் பொருட்களை சூடாக்க மாத்திரம் உபயோகப்படும். சில சமையல் வேலைகளை அதாவது Baking, Grill போன்றவற்றைச் செய்ய சாதாரண Owen ஐ உபயோகிப்போம். Microwave விரைவாக செயற்படக் கூடியது. ஆனால் சாதாரண Owen சூடாகி, சமையலைச் செய்ய நேரம் எடுக்கும். கடந்த ஆண்டு Microwave Owen ஐயும் சாதாரண Owen ஐயும் சேர்த்து ஒரு Two in One ஆக புதிய ஒரு சாதனம் General Electric நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. இது Advantium என அழைக்கபடுகின்றது. இது பழைய Owen ஐ விட 1/4 பகுதி நேரத்தில் தன்னுடைய வேலையை செய்து முடிக்கும். 90 வீதமான சூடாக்குதலை Halogen Light பல்புகள் செய்கின்றன. மிகுதியை Microwave சூடாக்குகின்றது. இந்த முறையில் சூடாக்கும் போது மணம், குணம், சுவை போன்றவை குறையாமல் இருக்கும். பழைய Owen இல் சூடாக்கும்போது வெளியிருந்து உட்பக்கமாக சூடாக்குகின்றது. அத்துடன் இயக்கியவுடனேயே சூடாக்க ஆரம்பித்து விடும். இந்த சாதனம் ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம் Microwave Owen போன்றும் சாதாரண Owen போலும் இரண்டு விதமாக பாவிக்கப்படக்கூடியது. இதை விட 100 வெவ்வேறு விதமான சமையல் முறைகளுக்கு Recipe களுக்கு முன்கூட்டியே Preset பண்ணிய பொத்தான்கள் உண்டு அவற்றை அழுத்துவதன் மூலம் சரியான முறையில் சமைக்கலாம்.

சமயலறையுடன் சம்பந்தப்பட்ட இன்னொரு புதியசாதணம் Dish-washer என்று அழைக்கப்படாமல் dish-drawer என அழைக்கப்படுகின்றது. இந்த dish-drawer ஒரு dish washer தான். ஆனால் முன்னைய இந்த கோப்பை கழுவும் இயந்திரங்களைவிட வடிவத்தில் வேறுபட்டது. இந்த சாதனம் சமையலறையிலுள்ள சாதாரண drawer அல்லது லாச்சிகள் போன்ற அமைப்பை உடையதாக இருக்கும்.இதில் இரண்டு லாச்சிகள் இருக்கும். ஒவ்வொன்றும் தனித்தனியாக இயங்கக் கூடியது. தனித்தனியாக இழுத்து மூடப்படக்கூடியது. சமயலைறையில் இதைப்பார்த்தால் சாதாரண cupboard போன்றுதான் இருக்கும். முன்னையஇயந்திரங்களை விட சத்தம் குறைவானதாக இருக்கம்.

வீட்டில் பாவிக்கக் கூடிய இன்னுமொரு புதிய சாதனம் Eureka என்னும் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட RobotVac என்னும் இயந்திரம் ஆகும். இது ஒரு Vacuum-cleaner (வக்கூம் கிளீனர்) ஆகும் இதற்கு வயர் ஒன்றொன்றும் கிடையாது. தானாக அசையக்கூடியது. 15 அங்குல விட்டமுடைய வட்டவடிவான ஒரு அமைப்பாகும். மேற்புறத்தினை இலகுவாக திறக்கக்கூடிய மூடியை திறந்து தூசு அடையும் பையை மாற்றலாம். இதனுள் சிறிய மின்கணணி chip ஒன்றும் software ஒன்றும் இருக்கும். இவைதான் இதை இயக்குகின்றது. Sonar system எனப்படும் ஒரு உணர்த்தியும் இருக்கும். இந்த sensor அல்லது உணர்த்தி இந்த சாதனம் பொருட்களில் மோதாமல் அதை விலத்தி செல்வதற்கு உதவுகின்றது. இது 15 அங்குல விட்டமுடைய ஒரு சிறிய வட்டவடிவமான டப்பா போன்ற அமைப்புடையதால், தளபாடங்களுக்கு கிழே எல்லாம் சென்று அதாவது இலகுவில் செல்லமுடியாத மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று தூசுகளை அகற்றுகின்றது. இரண்டு மணித்தியாலங்களுக்கு சார்ஜ் பண்ணினால் ஒரு மணித்தியாலம் தொடர்ந்து இது இயங்கக்கூடியதாக உள்ளது.


11 வருடங்களாக தமிழர் மத்தியில்

**யோகாஸ்**

☎: (416) 267-0408


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | | 3 |
| | ■ | | ■ | | ■ | 4 | |
| | ■ | | ■ | 5 | | 6 | |
| | | 7 | ■ | ■ | ■ | ■ | ■ |
| ■ | ■ | | ■ | | | | 8 |
| | ■ | | | 9 | ■ | ■ | ■ |
| | 10 | ■ | ■ | | ■ | 11 | |
| 12 | | | | 13 | | | ■ |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் FEBRUARY 28, 2000க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 104

**இடமிருந்து - வலம்**

1. ஏற்றுக்கொள்
3. தேசம் (வல-இட)
4. கண்
5. வீட்டிற்கு வாடகை போல் காணி நிலத்திற்கு இது
7. மாட்டு தொழுவம் (வல - இட)
8. விருப்பம்
9. அடக்கம் (வல - இட)
11. நாங்கள்
12. வள்ளுவருக்கு 133' உயர சிலை வைத்திள்ள இடம்

**மேலிருந்து கீழ்**

1. சந்தை
2. மாணவருக்கு இருக்க வேண்டிய குணம்
3. 24 நிமிடங்களை குறிக்கும் தமிழ் அளவு
5. கன்னி (கீழ்-மேல்)
6. அரிசிக்கும் உமிக்கும் இடையில் இருப்பது (கீழ்-மேல்)
8. வெட்கம்
10. பெண்ணின் கண்ணிற்கு இதன் கண்ணை ஒப்பிடுவர்
11. இடுப்பு
12. இது சிறிதானாலும் காரம் பெரிது என்பர் (கீழ் - மேல்)
13. மங்கலத்திற்காக முகப்பில் வைப்பது (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ச | ந் | தி | ரி | கா | ■ | தி | ஆ |
| ஞ் | ■ | ர | ■ | ■ | கை | வி | னை |
| சா | த | க | ம் | ■ | கொ | ■ | யி |
| ர | ■ | டு | ■ | ■ | டு | ■ | ற் |
| ம் | ட | க | ங் | ச | ■ | ■ | வு |
| ■ | ■ | ம் | ■ | கோ | யி | ல் | ■ |
| றை | ■ | ■ | ■ | த | ■ | கோ | பி |
| பா | க் | கு | நி | ரி | னை | ■ | ணை |

**#103இல் வெற்றி பெற்றோர்**

1)P. Parathan, North York, Ont.
2.K. Siva, Toronto, Ont.


***இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்***


இந்த RobotVacஐ ஒத்த செயற்பாடுடைய ஒரு விளையாட்டுப்பொருள் ஒன்று ஜப்பானில் (Sony) சோனி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது. இது Robot Pet என அழைக்கப்படுகின்றது.இது ஒரு இயந்திர செல்லப்பிராணி. இயந்திர நாய்க்குட்டி ஆகும். Aibo என்று பெயரிடப்பட்ட இந்த இயந்திர நாய்க்குட்டி தான். செண்ற ஆண்டின் சிறந்த இலத்திரனியல் சாதனமும், விளையாட்டுப் பொருள்ஆகவும் கருதப்படுகின்றது. இது நாய்க்குட்டியை போன்று தெரியாத ஆட்களை கண்டால் குலைக்கவும், தெரிந்த ஆட்களை கண்டவுடன் வாலை ஆட்டி விளையாடக்கூடியதாகவும் Program செய்யக்கூடியது. பந்தை எறிந்தால் ஓடிச்சென்று அதை கவ்வி எடுத்துவரும். கால்கள், தலை, உடல், வால் எல்லாம் உயிரான நாயைப்போன்று இயங்கக்கூடியது. தொலைபேசி மணி அடித்தால் தொலைபேசியை வாயால் கவ்வி எடுத்து கொடுக்கக்கூடியது. இந்த விளையாட்டுப்பொருளை பற்றிய மேலதிக தகவல்களுக்கு WWW.Sony.Com என்ற Internet பக்கத்திற்கு சென்று பார்க்கலாம்.

Tissot Navigator என்ற புதிய கைக்கடிகாரம் ஒன்றும் சென்றவருடம் வெளிவந்துள்ளது. கடிகாரத்தின் டயலைச்சுற்றி ஒருவளையம் பொருத்தப் பட்டிருக்கும்இதில் உலகின் வெவ்வேறு நேரவலயங்களுக்கு உரிய வெவ்வொறு நாடுகளின் பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த வளையத்தை குறிப்பிட்ட நாட்டிற்கு நேராக திருப்பினால் கடிகாரத்தின் முட்கள் தானாக திரும்பி அந்தநாட்டின் தற்போதய நேரத்தைக்காட்டும். உதாரணமாக நீங்கள் இங்கிருந்து கொழும்பிற்கு போகும்போது ஐரோப்பாவில் Transit எடுத்தால் அங்கு நேரத்தைஒருதரம் மாற்றவேண்டும். பின்னர் கொழும்பை அடைந்தவுடன் மறுபடியும் நேரத்தை மாற்றவேண்டும். எனவே இப்படியான கடிகாரங்கள் அப்படியானசந்தர்ப்பங்களில் உதவியாக இருக்கும்.

புகைப்படத்துறையில் டிஜிட்டல் புகைப்பட வீடியோ கமெரா போன்றவை விற்பனைக்கு வந்துள்ளன. டிஜிட்டல் புகைப்படக்கருவிமூலம் எடுத்த புகைப்படங்களை உங்கள் கொம்பியூட்டரில் போட்டுப்பார்க்கலாம். ஆனால் டிஜிட்டல் சாதனங்கள் தற்போது விலை கூடியதாக உள்ளது. ஆனால் சென்ற ஆண்டு புகைப்படத்துறையில் முதலாவது இடத்தைப் பிடித்துக்கொண்டது. Kodak நிறுவனத்தால் வெளியிடப்பட்ட picture CD ஆகும். இதன் மூலம் உங்கள் சாதாரண புகைப்படக்கருவி - கமராவின் மூலம் படங்களை எடுத்து படச்சுருளை Kodak நிறுவனத்தில் கழுவக் கொடுத்தால். அதை அவர்கள் ஒரு Cdயில் digital முறையில் பதித்துக்கொடுப்பார்கள். இதற்கு மேலதிகமாக 15 டொலர்கள் அளவில் கொடுக்க வேண்டும். இந்த CDயில் ஒரு software ஐயும் பதித்துக் கொடுப்பார்கள். இந்த CD கொம்பியூட்டரில் போட்டு உங்கள் டிஜிட்டல் படங்களை பார்வையிடலாம். அத்துடன் CDயில் இருக்கும் softwared; மூலம் படங்களில் தேவையான மாற்றங்களை செய்து கொள்ளலாம். படத்தின் பின்னனிக் காட்சியை மாற்றிக்கொள்ளலாம். உங்கள் நிறத்தைக் கூட மாற்றலாம். எனவே சாதாரன கெமராவில் படத்தை எடுத்து இந்த முறைமூலம் டிஜிட்டலுக்கு மாற்றிக்கொள்ளலாம். படங்களை E.mailமூலம் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அனுப்பிக்கொள்ளலாம்.

இப்படியாக பல சாதனங்கள் கடந்த வருடம் வெளியிட்டுள்ளது. இதைவிட பல சாதனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றை www.popsci.com என்ற internet பக்கத்தில் பார்வையிடலாம்.

*விஜே குலத்துங்கத்தின் "அறிவுக்கு வேலை கொடு" வானொலி நிகழ்ச்சியை CTR வானொலியில் ஒவ்வொரு செவ்வாய் க் கிழமை இரவு 9மணி க்கு கேட்டு மகிழலாம்.*

**********************************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing





- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

Ontario's Drive Clean
Accredited Test & Repair Facility

Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON




Apple Apple Apple Apple Apple Apple Apple Apple



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")

*KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) 638-2796

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


## குளிர்கால வாகனப் பராமரிப்புகள்



குளிர்காலத்தில் எமது வாகனங்கள் பலவகையான பழுதுகளை அடைவதை நாம் பார்க்கலாம். அவற்றை தவிர்த்துக் கொள்ள இதோ சில வழிமுறைகள்

1. நாலு சில்லுகளினதும் காற்றின் அளவை சரி செய்து கொள்ளுங்கள். ஏனெனில் குளிர்காலங்களில் கோடைகாலங்களை விட காற்றின் அமுக்கம் குறைந்து காணப்படும்.

2. Spare Tireஐ எடுத்து அதன் காற்றின் அமுக்கத்தையும் சரி செய்து Jack, Tools இன் நிலைகளையும் சரி செய்து கொள்ளுங்கள்.

3. Winter Tire போடலாம். ஆனால் முன் இரண்டு சில்லுகளுக்கு மட்டும் போடுங்கள்.

4. எப்போதும் ஒரு கலன் Windshilde washer ஐ கையிருப்பாக உங்கள் வாகனத்தில் வைத்திருங்கள்.

5. Oil ஐ மாற்றுங்கள், மாற்றும் போது 5W 30 ஐ போடச் சொல்லுங்கள். இது உங்கள் வாகனம் குளிர்காலத்தில் இலகுவாக Start பண்ணஉதவும்.

6. Gas நிரப்பும் போது Gas Line Antifreze ஐயும் கலந்து விடுங்கள்

7. Wiper Blade ஐ சரியில்லை எனில் மாற்றுங்கள். Canadian Tire இல் மலிவாக கிடைக்கும்.

8. உங்கள் வாகனத்தினுள் உள்ள Fan ஐ Off பண்ணாதீர்கள். மிகவும் வெப்பமாக இருந்தால் வெப்பநிலையை மட்டம் குறையுங்கள். இதன் மூலம் எந்நேரமும் உங்கள் வாகனம் புதிய காற்றுடன், கண்ணாடிகள் மறைப்புற்றுல் காணப்படும்.

9. குளிர் காலத்தில் வாகனத்தை Start பண்ணும் முன்னர், Fan ஐ Off பண்ணுங்கள் வெப்ப நிலையை கூட்டி விடுங்கள். Honda வாகனங்கள் 60 Sec. இல் வெப்பத்தை தயாராக்கி விடுகின்றன. உங்கள் வாகனத்தின் மீற்றரின் மூலம், வெப்பநிலை கூடிவிட்டதை அடைந்ததும் Fan ஐ On பண்ணி, உங்கள் பயணம் முடியும் வரை Fan ஐ Off பண்ணாதீர்கள்.

10. வாகனங்களில் முக்கியமாக குளிர்காலத்தில் பிரயாணம் செய்யும் போது பலருக்கு தலையிடி, கண் எரிவு, சோம்பல் ஏற்படுவது வழக்கம். அதிலும் உங்கள் பிரயாணம் தூரப்பிரயாணமாக இருந்தால் சொல்லவே தேவையில்லை. இதற்கு முக்கிய காரணம் போதியளவு ஒட்சிசன் உங்களுக்கு கிடைக்காததே. இவற்றை தகுந்த இரண்டுவழிகள் உள்ளது. முதலாவதாக, உங்கள் வாகனத்தின் எல்லாக் கண்ணாடிகளையும் அரைமணி நேரத்திற்குக் ஒரு தடவை ஓடிக்கொண்டு இருக்கும் போதே திறந்து அரை நிமிடத்தில் மூடிவிடுங்கள். இரண்டாவதாக ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை வாகனத்தை விட்டு இறங்கி 5 நிமிடம் வெளிக்காற்றை சுவாசிப்பதும் சிறிது தடங்கலும் நன்மை தரும்

11. குளிர்காலங்களில் காலையில் வாகனத்தை Start பண்ண முன்னர், உங்கள் வாகனத்தின் Radio, Wiper, Light போன்ற எல்லாவற்றையும் Off பண்ணி விட்டு Start பண்ணுங்கள். ஏனெனில் குளிர்காலங்களில Battery இன் Power குறைவது இயல்பு.

12. வாகனத்தை ஓட்டும் போது கோடை காலத்தை விட கவனம் எடுங்கள். கூடுதல்இடைவெளிவிட்டு ஓடுங்கள்.

மேலதிக தொடர்புகளிற்கு - சோதீஸ் *Cell (416) 704 -1179*


நியூ மிலேனியத்தில்
ஸ்காபரோவில் 9 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

Also Air Conditioning Service & Repair


## NTE AUTO INC.
New Trade Engineering

என். ரி. இ. ஒட்டோ இங்க்

Contact: Sivabalan சிவபாலன்

Tel: (416) 750 - 1573

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough

# ஆரோக்கிய வாழ்வு (50)



N. செல்வசோதி

## யோக சிகிச்சை

### வயிற்றுக்கடுப்பு அல்லது ரத்த சீத பேதி

இந்த நோய்க்கான காரணங்களை மேலை நாட்டு மருத்துவ ஆராச்சி முறையில் கூட கண்டுபிடிக்கப்படவில்லை. இது ஒருவகை விஷக்கிருமிகளால்தான் உண்டாவதென்று சந்தேகிக்கப்படுகிறது. அத்துடன் மனக்கோளாறுகள், கவலைகள் போன்றவற்றாலும் வரலாமென்று ஊகிக்கின்றனர். திடீரென வரக்கூடியது- கடைத்தெருவில், சாக்கடைக்கருகில் சுத்தமில்லாத இடங்களிலிருந்து எடுத்தோ, வாங்கியோ கழுவாது சுத்தம் செய்யாது உண்பதாலும் வரக்கூடியதே.

இந்நோய் இலங்கை, இந்தியா போன்ற தெற்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த மக்களையே பெரும்பாலும் பாதிக்கிறது. இதற்கு அவர்கள் தமது நாளாந்த உணவில் மிளகாய் முதலிய காரவகைகளை அதிகம் சேர்ப்பதுதான் காரணம்.

### நோயின் தன்மை

இது பெருங்குடலுடன் தொடர்புள்ள நோயாகும். சிலருக்கு மாதக்கணக்கில் தொடர்ந்து வரும்.
அதிக ரத்தம் போனால் உடல் கனம் சீக்கிரம் குறையும். ரத்தமாவும் போகலாம், அல்லது ரத்தமும், சீதமும், மலமும் கலந்து போகலாம்.

### பொது சிகிச்சை

இதற்கு நன்றாக ஓய்வெடுத்தலே முக்கியம். அதிக நடமாட்டம் கூடாது. அதிகமாக உரையாடுதலையும் தேவையில்லாத மனக் கவலையையும் குறைக்க வேண்டும்.

### உணவு

இந்த நோய்க்கு உணவுத்திட்டம் ஒரு சிரமமான விஷயம். ரத்தம் போய்க்கொண்டிருப்பதால் எளிதில் ரத்தம் உற்பத்தி செய்வதற்குரிய இலகுவில் சமிபாடடையும், உஷ்ணம் தரக்கூடிய உணவு வகைகளைத் தெரிந்து உண்ணலாம். கெட்டியான உணவை காட்டினும் நீர்ப்பாங்கான உணவு நன்று. பசுப்பால் காச்சியபின் சிறிது அளவு கொடுக்கலாம். தயிர்ச்சாதம் உண்ணலாம். தயிரில் வெந்தயம் அரைக்கரண்டி சேர்ப்பது நன்மை தரும்.

புலால் உணவு, கடுகு, காரம், வறுத்த, தாளித்த உணவு வகைகளை சில காலம் விலக்கி வரவும்.

ஆப்பில் ரசம் (Apple Juice) திராட்சை ரசம் (Black Grape Juice) சற்று சூடாக்கி அருந்தவும். இனுப்பு, மசாலா கலந்த உணவு வகைகள் உகந்ததல்ல.

### யோக சிகிச்சை

| | ஆசனங்கள் | முறை | நிறுத்தும் காலம் |
|---|---|---|---|
| 1. | விபரீதகரணி | 3 | 3 நிமிடம் முதல் 7 நிமிடம் வரை |
| 2. | சர்வாங்காசனம் | 3 | 2 நிமிடம் முதல் 7 நிமிடம் வரை |
| 3. | மத்ச்யாசனம் | 3 | 1/2 நிமிடம் முதல் 1 நிமிடம் வரை |
| 4. | ஹலாசனம் | 3 | 4 வினாடி முதல்12 வினாடி வரை |
| 5. | பட்சி மொத்தாசதம் | 3 | 10 வினாடி முதல்15 வினாடி வரை |
| 6. | நாடிசுத்தி | 1 | 3 நிமிடம் முதல் 7 நிமிடம் வரை |
| 7. | சாந்தி ஆசனம் | 1 | 5 நிமிடம் முதல்10 நிமிடம் வரை |

### குறிப்பு

பிறர் உதவியுடன் இந்த ஆசனத் திட்டங்களை பூர்த்தி செய்யவும்


**யோகாசன வகுப்பு**

யோகாசனப் பயிற்சிகள் மூலம் உங்கள் உடல் நலத்தைப் பேணுங்கள். யோகாசனப் பயிற்சி வகுப்புக்கு தொடர்புகொள்ள
இடம்: Woburn Collegiat e (Markham /Ellesmere)
நேரம்: 7:30 am - 8:30am தொடர்புகளிற்கு: - சத்தி: 291-5853



**Neelam SILK**
**நீலம் சில்க்**

2000ஆம் ஆண்டின் புதிய புடவைத் தெரிவுகளை நம்மவர்களுக்கு அறியத்தருகிறார்கள் 'நீலம் சில்க்'

உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்

- முகூர்த்தப்பட்டுப் புடவைகள்
- பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread Work பட்டுப்புடவைகள்
- ரிசு சேலைகள்
- காஞ்சி 2000 ரிசு சேலைகள்
- Emboss Tissue சேலைகள்,
- Cut Work சேலைகள்
- அபூர்வா 2000 Cut Work



**புதிய வெளியீடுகள்**
மைசூர் சில்க் சேலைகள், சோனா மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

'நீலம் சில்க்'

1453 GERRARD STREET EAST (Indian Bazzar)
CALL: (416) 778- 7455 FAX: (416) 778-8484


### நினைவில் கொள்ள

வயிறு முட்ட சாப்பிடுவது நல்லதல்ல. உதாரணமாக ஒரு பாத்திரம் நிறைய அரிசியும், தண்ணீரும் வைத்தால் வெந்து பக்குவம் ஆகாது. அதேபோல வயிறு நிறைய சாப்பிட்டால் அது நன்றாக ஜீரணமாகாது.

உணவு பொருள்களால் ஏற்படும் தீங்கை அவற்றுடன் இன்னொரு பொருளை சேர்த்து சாப்பிடுவதன் மூலம் தடுக்க முடியும். வேர்கடலையை அதன் எதிரியாகிய வெல்லத்துடன் கலந்து சாப்பிடவேண்டும்.

எப்போதுமே உணவு காய்கறிகளை அரை வயிறு சாப்பிடவேண்டும். தண்ணீர், மோர் ஆகியவற்றை முக்கால் வயிறு சாப்பிட வேண்டும். கால் வயிறு எப்பொழுதும் காலியாக இருக்கவேண்டும்.

அறுசுவையில் உடல் நலம் உள்ளது. துவர்ப்பு சுவை ஆற்றலையும், கார்ப்பு சுவை வீரத்தையும், இனிப்பு வளத்தையும், உவர்ப்பு தெளிவையும், கசப்பு மென்மையையும், புளிப்பு இனிமையையும் தரக்கூடியவை.

புத்தியை அதிகமாக பயன்படுத்தி உடல் உழைப்பு சிறிதும் இல்லாமல் வேலை செய்பவர்களுக்கு பசியும் தாகமும் ஏற்படாது. இவர்கள் பால், பழங்களை அதிகமாக சாப்பிடவேண்டும்.



கனடாவில் முதன்முதலில் தலைவாழை விருந்து படைத்தவர்கள்

**கிராமத்து விருந்து**



RESTAURANT, CATERING, TAKE OUT L.L.B.O.
603 Kennedy Road,
Scarborough, Ont.
☎: (416) 266-4240

**TAKEOUT ONLY**
சிக்கன் அல்லது பீவ்(Beef) முஸ்லிம் ஸ்ரைல் பிரியாணி, தலை வாழையிலையில் ஆக $5.99 மட்டுமே



மட்டக்களப்புக்கு பணம் அனுப்ப
மட்டக்களப்புக்கு 24 மணி நேரத்தில் பணம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும். புளியந்தீவு, ஏறாவூர், செங்கலடி, வாழைச்சேனை, கல்முனை மற்றும் மட்டக்களப்பு டவுண் அழைக்கவும்
ஜோசப் (416) 266-4240

ஒரு சாதாரண மனிதரின் சிந்தனையில்...

# புதிய நூற்றாண்டில் பழைய பாடங்கள்



சென்ற இதழ் சிந்தனையின் இறுதியில்

இறைவனுக்கு நன்றி செலுத்தினேன். யார் இந்த இறைவன்? அவனது சக்தி என்ன?

மனிதனால் செய்யப்படக்கூடிய செயல்கள் எல்லாம் மனித சக்திக்குள் அடங்கி விடுகிறது. மனித சக்திக்கு அப்பாட்பட்ட செயல்களைக் செய்யக்கூடிய சக்தி ஒன்று உள்ளது. அந்தச் சக்தியை இறைவன் அல்லது ஆண்டவனின் சக்தி என்கின்றோம். அந்த இறைவனை பல வடிவங்களில் விநாயகராக, யேசுவாக, அல்லாவாக, வழிபடுகின்றோம், பிராத்திக்கின்றோம்.

விஞ்ஞான உலகத்தின் முன்னோடியான அமெரிக்க நாட்டின் தலை சிறந்த வைத்திய நிலையங்கள் பல, பல்கழைக்கழகங்களில் இருக்கின்றன. இந்த பல்கலைக் கழக ஆராச்சி கூடங்களில் மனிதனின் நோய்களைத் தீர்ப்பதற்கான ஆராச்சிகளை வெற்றிகரமாக செய்து அதன் முடிவுகளை நோயுற்றிருப்பவர்களுக்கு அதிலும் புற்று நோய், இதய சம்பந்தமான நோய்கள் போன்ற பாரிய நோய்களை தீர்ப்பதற்கு வைத்தியம் அளிக்கும் நிபுணர்கள் கூட நோயாளிகளிடம் சொல்வதெல்லாம் எம்மால் ஆனவற்றை செய்துவிட்டோம். இனி நீங்கள் வேண்டிய மருந்துவகைகளை தவறாமல் எடுப்பதுடன் பிரார்த்தனையும் செய்யுங்கள் என்பதேயாகும். காரணம் பல ஆராச்சிகளின் முடிவில் குணமடையும் நோயாளிக்கு கிட்டத்தட்ட முப்பது சதவீதம் பிரார்த்தனை உதவி செய்கின்றது என்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதேயாகும்.

அந்த பிரார்த்தனையை நாம் தினந்தோறும் பிள்ளையாரே, யேசுவே, அல்லாவே என்று எமது சிந்தனையை இறைவன் மீது பதித்து நல்ல தேக சுகத்தையோ, மன அமைதியையோ, வாழ்க்கையில் வெற்றியையோ தர வேண்டி பிரார்த்திக்கின்றோம். பிரார்த்தனை கைகூடும்போது அந்த இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றோம்.

இறைவன் நாம் வேண்டியவற்றை தருவான் என்ற நம்பிக்கையை மட்டும் மனதில் கொண்டு நல்ல சுகாதாரத்தை பேணாமலும், பழக்க வழக்கங்களை சரிவரக் கடைப்பிடிக்காமலும், கடின உழைப்பை செய்யாமலும் இருந்தால் நல்ல தேக சுகமோ, மன அமைதியோ, வாழ்க்கையில் வெற்றியோ கிட்டாது என்பது நாம் ஏற்கனவே அறிந்த பாடம் ஆகும். இறைவன் மீது நம்பிக்கை வைத்திருப்பவன் இயன்றவரை உண்மை உள்ளவனாக அன்பானவனாக இருப்பானாகில் இந்த உலகில் நன்மையே நடக்கும்.

நல்ல பழக்க வழக்கங்களை, நம்பிக்கைகளை நாளும் கடைப்பிடிப்பதுடன் எமது வருங்காலமாக இருக்கும் பிள்ளைகளுக்கும் பொறுமையாக சொல்லிக்கொடுப்பது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும் நாம் வீட்டில் வைத்து சொல்லிக் கொடுக்கும் நல்ல பழக்க வழக்கங்கள்தான் எதிர்காலத்தில் நாட்டினை வழிநடத்தும் தலைவன் ஒருவனை உருவாக்குகின்றது என்பதனை மறந்து விடக்கூடாது.

சிந்தனை தொடரும் .....

பரம் G. ஒரு சாதாரண மனிதன்


ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12

Professional Photographer - கதிர்

☎: (416) 750-8118

2381 EGLINTON AV. E.

KENNEDY/ EGLINTON, SCARBOROUGH



பூட்டு? சாவி?

KEERTH LOGSMITH

வீடு-வியாபாரம்-தொழிலகம்

வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்




(416) 439-3709


Pager: 375-7330

YARL WINDOW BLINDS & DRAPERY

கடந்த 8 வருடங்களாக தமிழ் மக்களின் நன்மதிப்பை பெற்ற எமது நிறுவனம் எமது முதலாவது ஸ்காபரோ, கிளையை 1530 Warden Ave. திறந்திருப்பதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

* உங்கள் வீடுகள் / வியாபார நிலையங்களிற்கு தேவையான சகல வித (இறக்குமதி செய்யப்பட்ட) நல்ல ரக கேட்டின் (Curtain), Blinds, Window Coverings
* நல்ல ரக துணிவகைகள் மொத்தமாக / சில்லறையாக
* Bed cover, Pillow, Cushion போன்றவற்றையும் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.







ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

தொடர்புகளுக்கு என். செல்வம்

☎: (416) 650 - 0377 (416) 419-9247

1530 Warden Avenue (Warden / Ellesmere)

Scarborough

பூச்சிகளை அழிக்கவே முடியாதா?

PEST CONTROL

* எலிகள் * கரப்பான் பூச்சிகள்
* எறும்புகள் * சிலந்திகள்




போன்றவற்றை முற்றாக அழித்து நிவாரணம் பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.



(416) 892-4994

7 நாட்களும் அழைக்கலாம்



* 100% முற்றாக அழிக்க முடியும் என்று எழுத்து மூலம் தரப்படும்.

* ஒருதடவை அணுகுங்கள் உண்மை புரியும்.

* WE ARE QUALIFIED, PROFESSIONAL, INSURED AND BONDED.

* NO NEED TO LEAVE TO HOME OR REMOVE DISHES DURING TREATMENT.

# விளையாட்டுத் தகவல்கள் (46)

-எஸ். கணேஷ்



## Under -19 World Cup 2000

### இறுதியாட்டத்தில் ஸ்ரீலங்கா Vs இந்தியா

January 11ம் திகதி ஆரம்பமாகிய Under -19 Cricket World Cup, January 28ஆம் திகதி இறுதியாட்டத்துடன் முடிவுற்றது. பொதுவாக இந்த Under -19 அணிகள் பெரும்பாலும் மிகவும் பிரசித்தம் பெற்றவை. ஏனெனில் இவ் அணியின் இளம் வீரர்களே தேசிய அணிக்கு வரவேற்கப்படுகின்றனர். இவ்வருடம் இந்த World Cup ஆட்டங்கள் அனைத்தும் ஸ்ரீலங்காவில் நடைபெற்று பெருமளவு ரசிகர்கள் கண்டு களித்தனர். எல்லாமாக 16 நாடுகள் இறுதி போட்டிக்கு தெரிவாகின. இப்போட்டிகளில் ஸ்ரீலங்காவின் இளம் நட்சத்திரங்கள் நன்றாக பிரகாசித்தார்கள். அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளை எல்லாம் ஸ்ரீலங்கா அணி மண்கவ்வச் செய்தது. ஆனால் இதில் குறிப்பாக இவ் Under -19 அணியில் எந்த ஒரு தமிழ் வீரனும் தெரிவாகவில்லை என்பது கவலைக்குரிய ஒரு விடயமாகும்.

இவ் World Cup இறுதியாட்டங்கள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. இதில் மேலும் இரண்டு பிரிவாக Super League Group எனவும் Plate ChampionShip Group எனவும் வகுக்கப்பட்டன.

Group A- England, Zimbabwe, West Indies , America
Group B - India, New Zealand, Bangladesh, Holland
Group C- South Africa, Pakistan, Kenya, Nepal
Group D - Australia, Srilanka, Ireland, Namibia

ஒவ்வொரு பிரிவிலும் இருந்து ஆக கூடிய புள்ளிகளை பெற்ற இரண்டு நாடுகள் தெரிவாகி Super League இல் விளையாடின. இதில பிரிவு Aயில் இங்கிலாந்து, மேற்கு இந்திய அணி, Group Bயில் இந்தியாவும் பங்களாதேசும், Group Cயில் பாகிஸ்தானும் சவுத் ஆபிரிக்காவும் Group Dயில் அவுஸ்திரேலியாவும் ஸ்ரீலங்காவும் தெரிவாகின. ஸ்ரீலங்கா அணி முதல் Round இல் எவ்வித தோல்விகளையும் பெறவில்லை. ஸ்ரீலங்கா அணி முதல் ஆட்டத்தில் ஐர்லண்ட் அணியை 8 விக்கெட்டுகளாலும் இரண்டாவது ஆட்டத்தில் Namibia அணியை 7 விக்கெட்டுக்களாலும் மூன்றாவது ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணியை 8 விக்கெட்டுக்களாலும் வெற்றி ஈட்டியது. அடுத்த சுற்றில் இங்கிலாந்து அணியை 41 ஓட்டங்களாலும் நேபால் அணியை 9 விக்கெட்டுக்களாலும் வெற்றி ஈட்டியது. அடுத்து பாகிஸ்தான் அணியை அரை இறுதியாட்டத்தல் 10 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தெரிவாகியது. இதில் சிறப்பாக இலங்கை அணியின் Fielding நன்றாக பிரகாசித்தது எனலாம். குறிப்பாக இலங்கை அணி சார்பாக துடுப்பாட்டத்தில் Daniels, Mubarak, Gajanayake ஆகியோர் பிரகாசித்தனர். பந்து வீச்சில் Nissake, Ganegame, Weeraratne, Dhammika ஆகியோர் திறம்பட பந்து வீசினர், அத்துடன் குறிப்பாக விக்கெட் Keeper ஆன Rashan Peiris பல Stump களை எடுத்து இலங்கை அணியின் வெற்றிக்கு வழிகோலினார்.

முதல் சுற்றில் தோல்விகளை சந்தித்த இந்திய அணி கால் இறுதி அரை இறுதி ஆட்டங்களில் எதிர்பாராத பல வெற்றிகளை பெற்றது. ஆனால் இறுதியாட்டத்தில் திறமையாக விளையாடி இலங்கை அணியை வெற்றி கொண்டது. இதில் Ravneet Ricky, Sodhi, Yuvraj Singh, Patel ஆகியோர் சிறப்பாக விளையாடினார்கள்.

இறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.1 ஓவர்களில் 178 ஓட்டங்களை மட்டுமே பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அடுத்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நான்கு விக்கெட் இழப்பிற்கு 180 ஓட்டங்களை பெற்று 6 விக்கெட்டுகளால் Year 2000 Under 19 World Champions பட்டத்தை பெற்று கொண்டது. இச் சுற்றுப்போட்டியில் இந்தியா முதலாம் இடத்தையும் ஸ்ரீலங்கா இரண்டாம் இடத்தையும் சவுத் ஆபிரிக்கா மூன்றாம் இடத்தையும் பங்களாதேஷ் நான்காம் இடத்தையும் பெற்று கொண்டனர்.

## Carlton & Unitied Series

இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா ஆகிய மூன்று நாடுகள் பங்குபற்றும் தொடர் சுற்றுப்போட்டிகள் தற்போது அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகின்றன. இதில் இறுதியாட்டத்தில் அவுஸ்திரேலியாவும் பாகிஸ்தானும் மோதுகின்றன. பெப்ரவரி 2, 4, 6 திகதிகளில் 3 இறுதியாட்டங்கள் நடைபெறும். இதுவரை நடைபெற்ற போட்டிகளின் விபரங்கள்.

1. Jan. 09, 2000 பாகிஸ்தான்.184 ஓட்டங்கள் 8 விக்கெட் (50 ஓவர்)- பாகிஸ்தான்
அவுஸ்திரேலியா 139 " - (45 ஓவர்கள்) 45 ஓட்டங்களால் வெற்றி

2. Jan. 10, 2000 இந்தியா-195 ஓட்டங்கள் (48.5 ஓவர்) - பாகிஸ்தான்
பாகிஸ்தான்-196 ஓட்டங்கள் 8 விக்கெட்டுக்கள் (49 ஓவர்கள்) 2 விக்கெட்டுக்களால் வெற்றி

3. Jan. 12, 2000 அவுஸ்திரேலியா - 269 ஓட்டங்ள் 7 விக்கெட் (50 ஓவர்கள்) அவுஸ்திரேலியா
இந்தியா.241 ஓட்டங்கள் 6 விக்கெட் (50 ஓவர்கள்) 28 ஓட்டங்களால் வெற்றி

4. Jan. 14, 2000 இந்தியா 100 ஓட்டங்கள் (36.3) ஓவர் - அவுஸ்திரேலியா
அவுஸ்திரேலியா-101 ஓட்டங்கள் 5 விக்கெட்(26.5 ஓவர்கள்) 5 விக்கெட்டுக்களால் வெற்றி

5. Jan. 16, 2000 பாகிஸ்தான்-176 ஓட்டங்கள் 9 விக்கெட்டுக்கள் (41 ஓவர்) - அவுஸ்திரேலியா
அவுஸ்திரேலியா-177 ஓட்டங்கள் 4 விக்கெட்டுக்கள் (38 ஓவர்) 6 விக்கெட்டுக்களால் வெற்றி

6. Jan. 19, 2000 அவுஸ்திரேலியா-286 ஓட்டங்கள் (49.4 ஓவர்கள்) - அவுஸ்திரேலியா
பாகிஸ்தான் - 205 ஓட்டங்கள் (45.2 ஓவர்கள்) 81 ஓட்டங்களால் வெற்றி

7. Jan. 21, 2000 பாகிஸ்தான்-262 ஓட்டங்கள் 7 விக்கெட் (50 ஓவர்கள்) - பாகிஸ்தான்
இந்தியா - 230 ஓட்டங்கள் (46.5 ஓட்டங்கள்) 32 ஓட்டங்களால் வெற்றி






8. Jan. 23, 2000 அவுஸ்திரேலியா 160ஓட்டங்கள் 9விக்கெட் (50ஓவர்கள்) அவுஸ்திரேலியா
பாகிஸ்தான்-145 ஓட்டங்.கள் (48.5 ஓவர்கள்) 15 ஓட்டங்களால் வெற்றி

9. Jan. 25, 2000 இந்தியா-267 ஓட்டங்கள் 6 விக்கெட்டுகள் (50 ஓவர்கள்) இந்தியா 48
பாகிஸ்தான் - 219 ஓட்டங்கள் (44.4 ஓவர்கள்) ஓட்டங்களால் வெற்றி

10. Jan. 26, 2000 அவுஸ்திரேலியா-329 ஓட்டங்கள் 5 விக்கெட் (50 ஓவர்கள்) அவுஸ்திரேலியா
இந்தியா - 177 ஓட்டங்கள் (46.5 ஓவர்கள்) 152 ஓட்டங்களால் வெற்றி

11. Jan. 28, 2000 பாகிஸ்தான் - 261 ஓட்டங்கள் 8 விக்கெட் (50 ஓவர்கள்) பாகிஸ்தான்
இந்தியா - 157 ஓட்டங்கள் (46.1 ஓவர்கள்) 106 ஓட்டங்களால் வெற்றி

## உதைபந்தாட்டச் செய்திகள்


Brazilian Rivaldo

1999 இன் World Best Player ஆக பிரேசில் நாட்டைச் சேர்ந்தவரும் தற்போது Barcelona கழகத்தில் விளையாடிவரும் உதைபந்தாட்ட வீரர் ஆன Rivaldo தெரிவு செய்யப்பட்டார். 140 நாட்டை சேர்ந்த National Coaches சேர்ந்த ஒவ்வொரு வருடமும் சிறந்த விளையாட்டு வீரரை தெரிவு செய்வார்கள்.

முதலாம் இடம் - Rivaldo (Barcelona கழகம்) - பிரேசில் - 543 புள்ளிகள்
இரண்டாம் இடம் - David Beckham (Manchester கழகம்) - இங்கிலாந்து-194 புள்ளிகள்
மூன்றாம் இடம் - Gabriel Batistuta (Ac Fiorentina ) - ஆர்ஜன்ரீனா - 79 புள்ளிகள்

இதுவரை தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்களை இங்கு பார்ப்போம்.

1998 - Zidane (பிரான்ஸ்)
1997 & 1996 - Ronaldo (பிரேசில்)
1995 - George Weah (லைபீரியா)
1994 - Ronmario (பிரேசில்)
1993 - Robesto Bagegio (இத்தாலி)
1992 - Van Basten (Holland)
1991 - Lothar Matthaus (ஜேர்மனி)

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

-தொகுப்பு - பரம் & சண்

### 1972

1. அகத்தியர்*
2. அன்னை அபிராமி
3. அன்னமிட்டகை
4. அப்பா டாட்டா
5. அவசரக் கல்யாணம்
6. அவள்*
7. ஆசீர்வாதம்
8. இதய வீணை*
9. இதோ எந்தன் தெய்வம்
10. உனக்கும் எனக்கும்
11. என்ன முதலாளி சௌக்கியமா*
12. எல்லைக் கோடு
13. கங்கா
14. கனிமுத்துப் பாப்பா
15. கண்ணம்மா *
16. கண்ணா நலமா
17. கருந்தேள் கண்ணாயிரம்
18. காசேதான் கடவுளடா
19. காதலிக்க வாங்க
20. குறத்தி மகன் *
21. சக்தி லீலை*
22. சங்கே முழங்கு *
23. சவாலுக்கு சவால்
24. ஞான ஒளி
25. டில்லி - டு- மெட்றாஸ்
26. தர்மம் எங்கே *
27. தங்கத்துரை *
28. தவப்புதல்வன்
29. தாய்க்கு ஒருபிள்ளை
30. திக்குத்தெரியாத காட்டில்*
31. திருநீலகண்டர்
32. தெய்வம் *
33. தெய்வ சங்கல்பம்
34. நல்ல நேரம்*
35. நவாப் நாற்காலி
36. நான் ஏன் பிறந்தேன்*
37. நீதி*
38. பதிலுக்குப் பதில்*
39. பட்டிக்காடா பட்டணமா
40. பாட்டொன்று கேட்டேன்
41. பிள்ளையோ பிள்ளை *
42. புகுந்த வீடு
43. பொன்மகள் வந்தாள்
44. மாப்பிள்ளை அழைப்பு
45. மிஸ்டர் சம்பத்
46. யார் ஜம்புலிங்கம்
47. ரகசியப்பெண் 117
48. ராணி யார் குழந்தை
49. ராஜா*
50. ராமன் தேடிய சீதை*
51. வரவேற்பு
52. வசந்த மாளிகை*
53. வாழையடி வாழை
54. வெள்ளி விழா
55. ஜக்கம்மா
56. ஹல்லோ பார்ட்னர்.

1972ம் ஆண்டு வெளியீடுகள் தமிழ்த் திரையுலகின் ஆரோக்கியமான வளர்ச்சியையே சுட்டிக்காட்டுகின்றன. சுமார் 56 திரைப்படங்கள் இவ்வாண்டில் வெளியாயின.

(சின்னவரது படமாக ஆறு (திரையுலகில் "சின்னவர்" என்பது எம். ஜியாரைக் குறிக்கும்.) சிவாஜி அவர்களது ஏழு எம். ஜி ஆர் நடித்த ”அன்னமிட்ட கை, இதய வீணை, சங்கே முழங்கு, நல்ல நேரம், நான் ஏன் பிறந்தேன், இராமன்தேடிய சீதை என ஆறு படங்கள் திரையிடப்பட்டன. தயாரிப்பாளருக்கு கையைக் கடிக்காத படங்கள் இதய வீணை, இதயம் பேசுகிறது. ஆசிரியர் (மறைந்த) மணியன் அவர்களால் எம்.ஜி.ஆரை வைத்து ”உதயம் புரடக்ஷன்ஸ்”என்னும் பனரில் தயாரிக்கப்பெற்றது.
தேவர் பிலிம்ஸ் தயாரித்த ”நல்ல நேரம்” ஹந்தியில் ”ஹநத்தி மேரா சாததி” யெனத் தயாரிக்கப் பெற்று வசூலில் சக்கை போடு போட்டது.

நான் ஏன் பிறந்தேன்” எனும் தலைப்பில் எம். ஜி. ஆர் அவர்கள் தனது வாழ்க்ன நினைவுகளை ”ஆனந்த விகடன்” இதழில் தொடராக எழுதி வந்ததும் குறிப்பிடத்தக்கது.



பட்டிக்காடா பட்டணமா ஏ.சி. திரிலோகசந்தருடன்

சிவாஜி அவர்களது படங்களாக ”வீஜட்னாம் வீடு” சுந்தரம் எழுதி மேஜர் சுந்தரராஜன் அவர்கள் முக்கிய வேடமேற்று ”ஞான ஒளி” நாடகம் சிவாஜி அன்ரனி எனும் முக்கிய பாத்திரம் தாங்கி நடித்த நல்லதொரு படமாக வெளிவந்தது. நடிகர்திலகத்தின் நடிப்பாற்றலுக்கு இப்பாத்திரப்படைப்பு நல்லதீனி வழங்கியது. இயக்குனர் பி. மாதவன் இப்படத்தை இயக்கியிருந்தார்.

வெற்றிப் படவரிசையில் ”ஞான ஒளி” ஒன்றாகும். மேலும் ”தவப்புதல்வன்", ”நீதி", தர்மம் எங்கே", பட்டிக்காடா பட்டணமா", ”ராஜா", வசந்த மாளிகை" யென அனைத்தும் சிவாஜின் வெற்றிப்படங்களாகும். நீதி - ராஜா இரண்டையும் நடிகர் பாலாஜி தயாரித்திருந்தார். பி. மாதவன் இயக்கிய சிவாஜின் வெள்ளி விழாப்படம் ”பட்டிக்காடா பட்டணமா". ”வசந்த மாளிகை" இப்போது திரையிடப்பட்டாலும் காதலர்களால் அரங்கம் நிரம்பிவழியும். இலங்கையில் அதிக நாள் (1973ல் திரையிடப்பெற்றது) ஓடிய திரைப்படங்களில் வசந்த மாளிகையும் ஒன்றாகும்.

ஏ.வி.எம் ராஜன் அவர்கள் நடித்த நல்ல படங்களான ”அவள்" - தேவரின் ”தெய்வம்" - இயக்குனர் சிகரம் பாலச்சந்தரின் ”வெள்ளி விழா" (ஜெமினி, வாணிஶ்ரீ) மற்றும் முத்துராமன் - ஜெய்சங்கர் ஆகியோரின் நல்ல பல குடும்பப்படங்களும்.... பக்திப்படங்களான அகத்தியர் - அன்னை அபிராமி - சக்திலீலை - திரு நீலகண்டர் - ஆகிய படங்களும், நகைச்சுவை குணச்சித்திர நடிகர் நாகேபங்கேற்ற பல நல்லண்டில் திரையிடப்பட்டன.



### 1971ம் ஆண்டில் சென்னை சினிமா இரசிகர் சங்கத்தின் விருதுகள் விபரம்

| | |
|---|---|
| படம்: | ஞானஒளி |
| நடிகர். | சிவாஜி கணேசன் (ஞானஒளி) |
| கதை: | பிலஹரி (ஆசீர்வாதம்) |
| டைரக்டர்: | P. மாதவன (ஞானஒளி) |
| நடிகை: | வாணிஶ்ரீ (வெள்ளி விழா) |
| துணை நடிகர்: | சுந்தர்ராஜன் ( ஞான ஒளி) |
| துணை நடிகை: | ஜெயந்தி (வெள்ளிவிழா) |
| குழந்தை நட்சத்திரம்: | சேகர் (இதயவீணை ) |
| பின்னணி: | TMS, L. R. ஈஸ்வரி |
| இசை: | M.S. விஸ்வநாதன் (பட்டிக்காடா பட்டணமா) |
| சிறப்புப் படம்: | நீதி |

## நான் வாழப் போகிறேன்



-வீணை மைந்தன்

### சுவடு 47

நமது தமிழக முதல்வர் அன்புக்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் நடிகர் திலகம் அவர்களிடத்து நெருங்கிய தோழமையுணர்வும் பாசமும் கொண்டவர் என்று பல இடங்களில் குறிப்பிட்டிருந்தேன். பேரறிஞர் அண்ணாவும், கலைஞர்அவர்களும் நமது நடிகர் திலகத்தைப் பற்றி, அவர் திறமை பற்றி சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மிக உயர்வாகப் பேசி மன நிறைவு கொள்வார்கள்.

அப்படித்தான் சென்னையில் நடை பெற்ற ”ரஜினி 25” கலை விழாவில் கலந்து கொண்டு திரு. ரஜினிகாந் அவர்களைப் பாராட்டிப்பேசும் போதும் நமது நடிகர் திலகம் பற்றி அண்ணா அவர்கள் அன்று பேசியதை மீண்டும் கலைஞர்அவர்கள்நினைத்துக்கொண்டு வந்தார். நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் நடிகர் திலகத்தை நம்மவர்கள் ஹலிவுட் நடிகர் மார்லன் பிறான்டோவோடு ஒப்பிட்டுப்பேசுகிறார்கள். எனக்கென்னவோ தம்பி கணேசனைப் பார்த்துத்தான் மார்லன்பிராண்டோ நடிப்பின் பல்வேறு பரிமாணங்களைக் கவனத்தில் கொள்கிறோம் என எண்ணத் தோன்றுகின்றது” என அறிஞர் அண்ணா அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் தம்பி கணேசன் பற்றிக் கூறியதை நினைவுக்குக் கொண்டு வந்து ரஜினிகாந் அவர்களை ஹலிவுட் நடிகர் சில்வெஸ்டர்ஸ்ரலோனோடு ஒப்பிட்டுப்பாராட்டினார்.

நடிகர் திலகத்தின் நடிப்பாற்றலை தகுந்த முறையில் பாவித்து மிகச்சிறப்பான சிவாஜி படங்கள் இவை என்று பேச வைத்த இயக்குனரும், கதை வசனகர்த்தாவும், நடிகர் திலகத்தின் அன்புக்குப் பாத்திரமானவருமான திரு. ஏ. சி. திருலோகசந்தர் அவர்களும் அண்ணாவைப்போல், கலைஞரைப்போல் சிவாஜி அவர்களை என்றும் உயர்வாக மதிப்பவர் என்பதினால் இயக்குனர் ஏ.சி. திருலோக் அவர்கள் நடிகர் திலகம் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லியவற்றை இங்கு விரிவாகப்பார்ப்போம்.

”சிவாஜி கணேசன் அவர்களை வைத்து நான் 24 படங்கள் செய்திருக்கிறேன். ஆனால் அன்றும் சரி இன்றும் சரி நான் அவருடைய பரம இரசிகன்” என்கிறார் உயர்ந்த மனிதர் திருலோக் அவர்கள்.

தமிழ்ப்பட இயக்குனர்களில் உயர்ந்த மனிதரும் இவரே. சுமார் ஆறு அடி உயரமுள்ள ஆஜானுபாகுவானவர். அவர் மேலும் கூறுகிறார் ”பராசக்தி படம் திரையிடப்பட்டபிறகு தமிழ்த்திரையுலகிலேயே மிகப்பெரிய மாறுதல் - புதிய சகாப்தம் தோன்றப்போகிறது என்று நம்பிய பல்லாயிரக்கணக்கானவர்களில் நானும் ஒருவன். அந்த நம்பிக்கை வீண் போகவில்லை. அந்த நம்பிக்கைக்கு வித்திட்டவர் நடிகர் திலகம் என்றால் அது மிகையில்லை.

நான் உதவி இயக்குனராகப் பணியாற்றிய காலங்களில் பக்கத்து செட்டில் அவர் நடித்துக்கொண்டு இருக்கும் படம் தயாரிப்பில் இருக்கும். அங்கே போய் ஓர் ஓரமாய் நின்றபடி அவருடைய நடிப்பை கண்கொள்ளாமல் ரசிப்பேன்.அப்போதைய நிலையில் அவரை வைத்து மிக அதிகமான படங்களை இயக்குபவனாக வரப்போகின்றேன் என்று நான் சுத்தமாக எதிர்பார்க்கவேயில்லை. அவருடைய நடிப்பைப்பற்றி பேசவோ விபரிக்கவோ நேரம் போதாது.உலகப்பத்திரிகைகளின் எல்லாப்பக்கங்களையும் நிரப்பக்கூடிய அளவுக்கு அவரது ஆற்றலை விரிவாக எடுத்துச்சொல்ல முடியும்.

பாலாஜின் படத்திற்கு இயக்குனராக பொறுப்பேற்றுக்கொண்ட நான் அதில் கதாநாயகனாக நடிக்கும் சிவாஜிகணேசனிடம் கதையயை சொல்ல போன போதுதான் முதன்முதலாக டைரக்டர் என்ற முறையில் அவருடன் அறிமுகமானேன். அந்த சந்திப்பிலேயே நாங்கள் இணைபிரியாத நண்பர்களாகிவிட்டோம். பாச உணர்வு பின்னிய வலையில் நாங்கள் கட்டுண்டுவிட்டோம். இருபது வருடங்களாக மதிய உணவை இருவரும் ஒன்றாக சேர்ந்துதான் சாப்பிட்டு இருக்கிறோம் என்றால் எங்களுக்கிடையே இருக்கும் நட்புணர்வை அது காட்டுகின்றது என்றுதான் அர்த்தம்.

அவர் மிகச்சிறந்த நடிகர் மட்டுமல்ல மிகநன்றாகப்பாடுவார். சங்கீத ஞானம் மிக கைவரப்பெற்றவர். எந்த கர்நாடக இசை ராகத்தையும் கண்டுபிடித்து விடும் வல்லமை அவருக்கு உண்டு. அதனால்தான் அவர் சம்பந்தப்பட்டபாடல்காட்சிகளை கவனித்தீர்களேயானால் அவரே உணர்ச்சிவசப்பட்டு பாடுவது போலவே தோன்றும். கழுத்து நரம்புகள் புடைக்க உதடுகள் மிகச்சரியாக வார்த்தைகளை உச்சரிக்க முகபாவங்களும் ராக அலைகளுக்கு ஏற்றால்போல்மாறும் மாயத்தை அவர் செய்ய கவனிக்கலாம்.



ஒருமுறை நான் கேட்டேன் ”இவ்வாறு அழகாக பாடுகிறீர்கள் ஆனால் நாடகமேடையானாலும்சரி, சினிமாவானாலும்சரி நீங்கள் ஏன் பாடுவதில்லை. ஒரு ரி. ஆர்.மகாலிங்கம் மாதிரி -ஒரு பி. யூ. சின்னப்பா மாதிரி ஏன் நீங்கள் திகழக்கூடாது?அதற்கு அவர் ரொம்பவும் அழகாக பதில் சொன்னார், ”என்னுடைய ஒரே நோக்கம் நடிப்புத்தான். நடிப்புத்துறையில் நான் சிறக்க வேண்டும். ஆகவே அதில் மட்டுமே நான் முழுக்கவனமும் செலுத்துகின்றேன்.என் நடிப்பைபார்க்கும் இரசிகர்களின் கவனம் என் நடிப்பில் இருந்து சிதறக்கூடாது என்று எதிர்பார்க்கிறேன். நான் பாடிக்கொண்டே நடிப்பதானால் இரசியர்கள் என் நடிப்பை விடவும் இரசிப்பதற்கு பாட்டும் இருக்கிறதென்பதால் அவர்கள் கவனம் அதற்கு திரும்புவதை நான் விரும்பவில்லை. மேடையில் ஒரு பாடகரிடம் ”அந்தப்பாடலை பாடுங்கள்” என்று அவருடைய இரசியர்கள் கேட்பதைப்போலவே நான் மேடையில் இருக்கும் போது ”அந்த நடிப்பை நடித்துக்காட்டுங்கள், இந்த நடிப்பை நடித்துக்காட்டுங்கள்” என்று கேட்டுஅதை நிறைவேற்றத்தான் நான் ஆசைப்படுகிறேன். ஆகவே நடிப்பு ஒன்றிலேயே என் முழுத்திறமையையும்,முயற்சியையும், முழுச்சத்தியையும் குவித்து பிரயோகிக்கப்போகிறேன்.

என் இந்த திறமைகள் மனதுக்குள்ளேயே அமுக்கிவைத்த அந்த ஆற்றல்களை ஒருமுகப்படுத்தி நடிப்புத்திறமையிலேயே செலவிட்டு அதன் பரிமானத்தை, அதன் எல்லையை தொடவிரும்புகிறேன். ஆகவே தெரிந்து இருந்தாலும் எனக்கு பாட்டு வேண்டாம். நடிப்பு நடிப்பு அதுதான் எனது மூச்சு”. நான் அசந்துவிட்டேன்.

(இயக்குனர் ஏ. சி. திருலோகசந்தர் தொடர்கிறார் ...)
அடுத்த இதழில்

# 21ஆம் நூற்றாண்டில் கணனி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?

-ராஜா சொக்கலிங்கம்
Computer Consultant



## பகுதி (3)

### CPU - Central Prossing Unit
### மத்திய இயக்கப் பகுதி

CPUஐ தமிழ்படுத்திப் பார்ப்பதன் மூலம் இதன் கருத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியும். முதன் முதலில் இந்த CPU தயாரிப்பதற்கு பல Relay களை இணைத்து Wiring செய்தார்கள். முதன் முதலில் இந்த CPU ஐ தயாரிப்பதற்கு பல Relay களை இணைத்து பெரிய Department Store அளவில் செய்தார்கள். அதன்பின்பு பல இணைப்புகளை குறைத்து ஒரு சிறிய கடை அளவில் செய்தார்கள். அதை இன்னும் சுருக்கிச் சுருக்கி ஒரு Fridge அளவிற்கு செய்தார்கள். அதன் பின்பு அதை இன்னும் சுருக்கிச் சுருக்கி ஒரு சிறிய 2 அங்குலம் நீளம் 2 அங்குல அகலம் 1/4 அங்குலம் மொத்தமுள்ள ஒரு சிறிய Chip ஆக செய்துள்ளார்கள். ஒரு பெரிய Department Store அளவிற்கு இருந்த CPU ஐ சுருக்கி சிறிதாக கண்டு பிடித்துள்ளார்கள். முதலில் ஒரு Transistor ஐ கண்டு பிடித்தார்கள். பின்னர் பல Transistors களை சேர்த்து IC (Intergrated Circuit) ஐ கண்டு பிடித்தார்கள். பல IC களை சேர்த்து LSI (Large Scale Intergratd Circuit) ஐ கண்டு பிடித்தனர். பல LSI களை சேர்த்து CPU ஐ உருவாக்கினார்கள்.


1980 இல் சதாரண மக்களுக்காக அவர்கள் பாவிக்கக்கூடிய Computer ஐ கண்டுபிடித்தார்கள். இந்த குறுகிய காலத்தில் எவ்வளவு இந்த Computer வளர்ச்சியடைந்துள்ளதை எல்லோரும் புரிந்த கொள்ள வேண்டும். 1980 இல் ஆரம்பித்து 2000 ஆம் ஆண்டிற்குள் எவ்வளவு வளர்ச்சியடைந்துள்ளது. உதாரணமாக மற்றைய எல்லாத் துறையும் 200 வருடத்தில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்ததோ அந்த முன்னேற்றத்தை இந்த 20 வருடத்தில் Computer அடைந்திருப்பது, இந்த Computer மக்களுடன் எப்படி ஒன்றிருக்கிறது என்பது உண்மையாகும். இதனுடைய வேகம், இதனுடைய தேவை, இதை எப்படி கற்றுக் கொள்வது, இது மனிதவாழ்க்கையுடன் எப்படி ஒன்றியுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது. ஒரு பயிர் நன்றாக வளரவேண்டுமெனில் தண்ணி வேண்டும். நல்ல உரம் வேண்டும். இதனால் வளர வேண்டிய அவசியம் அந்த பயிருக்கு உண்டாகின்றது. ஏதாவது ஒரு தடை இருந்தால் அதன் வளர்ச்சியில் தடை ஏற்படுகின்றது.

1980 ஆண்டு **8086** என்ற CPU ஐ கண்டுபிடித்தார்கள். இதை 086 என்று அழைத்தார்கள், பின்பு 186 என்று கண்டு பிடித்தார்கள். ஆனால் இது பாவனைக்கு வரவில்லை. அதன் பிற்பாடு 286 என் ற CPU கண்டு பிடித்தார்கள். 286 ஒரு Basic கொம்பியூட்டர் சிலவற்றில் Hard Driveவே இருக்காது. தனிய Floppy மட்டுமே இருக்கும். ஒரு சிறு அளவு Memory ஐ மட.டுமே கொண்டுள்ளது. இதனால் Date ஐ 2 Digit இல் மட்டும் காட்டக்கூடியதாக இருந்தது. ஆகையால் எவரும் கேட்க முடியாது ஏன் Y2K ஐ பற்றி யோசிக்கவில்லை என்று, ஏனென்றால் அக்காலத்தில் அவர்களுக்கு சிறியஅளவு Memory உடன் ஒரு கொம்பியூட்டர் தேவைப்பட்டது. ஒரு குழைந்தை பிறந்தவுடன் நடக்கும் என நாம் யோசிக்க முடியாது. அதே போலத்தான் இந்த CPU ம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றது.

**20 வருடத்தில்** (↕)

086 - முதல் CPU
186 - நடைமுறைக்கு வரவில்லை
286 - மக்களுக்காக வெளிவந.தது
386
486
586/ pentium
Pentim II
Pentium III

இந்த 20 வருடத்தில் எவ்வளவு வளர்ச்சி என்று பார்த்தீர்களா? இதில் CPU வளர்ச்சியை மட்டும் தான் பேசிக் கொண்டிருக்கிறோம். மற்றவையைப் பற்றி பேசவில்லை. ஏனென்றால் CPU தான் Hero. உதாரணமாக ரஜினி படம் என்று சொல்கிறோம். ஆனால்ரஜினி மட்டுமா நடித்தார். அவருடன் பலர் நடித்துள்ளனர். அதே மாதிரித்தான் CPU என்று ஒன்று இல்லாவிட்டால் கொம்பியூட்டர் இன்று ஒன்று இல்லை. உங்களிடம் என்ன Computer இருக்கென்று யாராவது கேட்டால் நீங்கள் சொல்லுவீர்கள் Pentium II or Pentium III என்று தான் நீங்கள் Hand Drive இன் பெயரையோ Motherboard ஐ சொல்ல மாட்டீர்கள். ஆகவே CPUஐ சொல்லும்போதுதான் என்ன கொம்பியூட்டர் என்று தெரியும்.




Safety Truck
Training School Ltd.
Training & Trucking
Classes A, D & Z
கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (6ம் ஆண்டு)
வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்

In Classes
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(12 Years Canadian Experience with Trucks)
Tel: (416) 616-5979 / (905) 793-9546
250 Summerlea Road, Brampton, ON

இதுவரையும் இன்னமும் Hardware பற்றி படித்துக் கொண்டும் தெரிந்து கொண்டும் இருக்கிறோம். இதற்கு மேலே முக்கியமானது ஒன்று Software. உதாரணமாக Hardware உடல் என்று சொல்னால் Software அதன் உயிர். ஒரு மனிதனுக்கு உடல் மட்டும் இருந்தால் போதாது உயிர் அதாவது சிந்திக்கின்ற தன்மையும் வேண்டும். சிலபேர் நினைத்து கொண்டு இருப்பார்கள் Hardware தான் முக்கியமென்று. சிலபேர் நினைப்பார்கள் Software தான் Main என்று. HardWare இல் உள்ளவருக்கு Hardware தான் முக்கியமானதாக தெரியும். SoftWare இல் உள்ளவருக்கு Software தான் முக்கியமானதாக தெரியும். அதனால் ஒன்று மட்டும் முக்கியம் என்று சொல்வது தப்பு. ஆகவே நாங்கள் ஒரு எண்ணத்தை விட்டு பொதுவான ஒரு எண்ணத்திற்கு வரவேண்டும். சிலபேர் நினைக்கலாம் A+ படித்தால் என்ன பயன். இப்ப வருகிற Computer எல்லாம் தயாராக (Readymade) வருகிறதே. ஆகையால் ஏன் இந்த A+ என்று நினைப்பது தவறு. தயாராக வருகிற கொம்பியூட்டரை தயாரிப்பவர்கள் A+ படித்தவர்கள் தான். A+ படித்தவர்கள்தான் புதுப்புது Hardware களை கண்டு பிடிக்கிறார்கள். இதனால் தான் புதுப்புது Software எழுத வேண்டி வருகிறது. ஆகையால் Hardware இருந்தால் தான் Software. இப்படியாக ஒன்றோடு ஒன்று சேர்ந்துள்ளது என்பதை நீங்கள் பொதுவாக உணர வேண்டும். என்பதால் நான் இவ என் பிற குறிப்பில் சேர்ந்துள்ளேன். ஒரு வானொலியை எடுத்தால் அது பாடவேண்டு என்றால் மின்சாரமும் முக்கியம் வானொலியும் முக்கியம். தனிய வானொலி இருந்து ஒன்றும் செய்ய முடியாது. அதேபோல் தனிய மின்சாரம் இருந்தும் ஒன்றும் செய்ய முடியாது. ஆகையால் மற்றவர்கள் சொல்கிறார்கள் Software தான் நல்லது. அதைப் படி அல்லது Hardware தான் நல்லது அதைப் படி என்று குழம்பாமல் உங்களுக்கு அதில் நாட்டம் அதிகமுள்ளதோ அல்லது எதில் உங்களுடைய அறிவு அதிகமாக உள்ளதோ அதை நீங்கள் தெரிந்து படிப்பதுதான் உங்களுக்கு நல்லது.

அடுத்தவாரம் CPU மட்டும் இல்லாமல் எல்லாத்திற்கும் பொதுவான Motherboard பற்றிப் பார்ப்போம்.

* முடிந்தவரை இப்பகுதியை சேமித்து வைத்துக் கொள்ளுங்கள் மீண்டும் வாசிப்பதால் ஆணித்தரமாக ஏற்றுக்கொள்ள வாய்ப்பு உள்ளது.

**மேலதிக தகவல்களிற்கு www.howstuffworks/category.computers.htm**

*(தொடரும்)*

சூரியக்குடும்பம்:-26 **விண்வெளி** தருபவர்: கனி

இன்று சூரிய கிரகணம் பற்றிப் பார்ப்போம். இந்த நிகழ்வு சூரியக் குடும்பத்தில் ஒரு விசேசித்த நிகழ்வாகவே காணப்படுகிறது. பூமியில் உள்ள மக்களுக்கு மாத்திரமே இந்த சூரிய கிரகணத் தோற்றப்பாடு தோன்றும்- தெரியும். வேறு எந்தக் கிரகத்திலும் இந்தச் சூரிய கிரகணத் தோற்றப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. இந்த வகையில் கூட எமது பூமி ஒரு விசேசித்த கிரகமாகச் சூரியக்குடும்பத்தில் காணப்படுகிறது.

சூரியன் நமது அம்புலியைவிட 400 மடங்கு பெரியதாக உள்ளது. அத்துடன் அம்புலியில் இருந்து சராசரியாக 390 மடங்கு தொலை தூரத்தில் (எமது பூமியில் இருந்து பார்க்கையில்) சூரியன் உள்ளது. இந்நிலையானது பூமியில் உள்ள ஒருவருக்கு சந்திரன் சூரியனை மட்டுமட்டாக மறைக்கக் கூடியதாக உள்ளது. இதன் விளைவாகவே சூரிய கிரகரணம் தோன்றுகின்றது. சந்திரன் சூரியனை முற்றாக மறைக்குமாயின் அது பூரண சூரிய கிரகணம் எனவும் சந்திரன் சூரியனின் ஒரு பகுதியை மட்டுமே மறைக்குமாயின் அது பகுதிச் சூரிய கிரகணம் எனவும் கூறப்படும். பூமியில் நமது நிலையைப் பொறுத்து இந்த சூரிய கிரகணம் எமக்குப் பகுதியாகவோ அல்லது பூரணமாகவோ தெரியும். சந்திரனின் கருநிழற் கூம்பு பூமியில் படும் பகுதியில் உள்ள மக்களுக்கு பூரண சூரிய கிரகணமும் நிறைவணுகு நிழல் படும் பகுதியில் உள்ளவர்களுக்கு பகுதிச் சூரிய கிரகணமும் தெரியும் நிறைவணுகு நிழலுக்கு வெளியே உள்ளவர்களுக்கு எந்தவொரு சூரிய கிரகணமும் தெரிவதில்லை.

சந்திரனின் பூமியைச் சுற்றிய வலம் வருகை பூமியின் தன்னைத்தானே சுற்றும் இயல்பு என்பவை காரணமாக சந்திரனின் கரு நிழற் கூம்பு பூமியில் ஏற்படுத்தும் சிறிய இருண்ட வட்டப்பகுதி மிக விரைவாக பூமியின் மேற்பரப்பைக் கடந்து செல்லும். சுமார் 270 km விட்டமுடைய இந்த இருண்ட பகுதி 1600 km/hr என்ற கதியில் பூமியின் மேற்பரப்பில் அசையும். இதனால் பூரண சூரிய கிரகணமானது 7.5 நிமிடங்களுக்கு மேல் ஒரு பகுதியில் நிலைப்பதில்லை. பொதுவாக 2. 3 நிமிடங்களுக்கு மட்டுமே சூரிய கிரகணம் தோற்றும்.


சந்திரன் சூரியனை மறைக்கத் தொடங்க கிரகணம் நிகழ்வு தொடங்கிவிடும். சுமார் ஒரு மணித்தியாலங்கள் வரை சந்திரன் மெது மெதுவாய் நகர்ந்து சூரியனை முற்றாக மறைக்கும். சந்திரன் முற்றாக சூரியனை மறைத்ததும் அப்பகுதி முழுவதும் இருளில் மூழ்கிவிடும். வீதிகளில் வாகனங்கள் வெளிச்சத்தை பாச்ச வேண்டிவரும். தெரு விளக்குகள் எல்லாம் ஒளியேற்றப்பட வேண்டும். சந்திரனின் கருநிழல் உள்ள பூமியின் பகுதி முழுவதும் பகலில் திடீரென அந்தகாரத்துள் நுளைந்து விடும். (இந் நிலை ஆதியில் இருந்த எம்மவர்களைப் பயமுறுத்தியதில் வியப்பேதுமில்லையே தான்.) வானம் கும்மிருட்டாகக் காணப்படும். வானத்தில் சில பிரகாசமான நட்சத்திரங்கள் கூட தென்படும். இந்நிலை சுமார் 2. 3 நிமிடங்களுக்கு தொடரும். பின்னர் மீண்டும் சிறிது சிறிதாக சூரியனின் வெளிச்சம் பூமியின் அப்பிரதேசத்தில் வரத் தொடங்கும்.

அன்று மனிதனைப் பயமுறுத்திய இந்த நிகழ்வானது இன்று மனிதன் விரும்பும் ஒரு அரிய நிகழ்வாகிவிட்டது. சூரியகிரகணம் நிகழக்கூடிய இடங்களை தேடி ஓடி மனிதர்கள் சூரிய கிரகணத்தைப் பார்க்க - அனுபவிக்கத் தொடங்கிவிட்டாரகள். அது சாதாரண மனிதனின் அறிவியல் நிலை முன்னேற்றம் என்றேதான் கூற வேண்டும். இந்த சூரிய கிரகணமானது பல விண்வெளிப் புதிர்களுக்கு, வினாக்களுக்கு விடையளித்துக் கொண்டே இருக்கின்றது. சூரியனை ஆய்வு செய்வதற்குக் கூட முதன் முதலில் பயன்பட்டது இந்த சூரிய கிரகணமே. நட்சத்திரங்களின் தோற்ற விலகல், திணிவினால் ஒளியின் பாதை விலகல் போன்ற மர்மங்களையும் இந்த சூரிய கிரகணத்தின் போதே அறியக் கூடியதாக, நிறுவக் கூடியதாக இருந்தது. 20ம் நூற்றாண்டின் மிகப் பெரிய அறிவியல் வெளிப்பாடாகிய சார்புத் தத்துவத்தை விளக்கவும் அயனஸ்ரையன் இந்தச் சூரிய கிரகணத்தையே உபயோகித்தார்.

சந்திரனின் பூமியை வலம் வரும் பாதை ஒரு நிறை வட்டமாக இராது ஒரு நீள்வட்டப்பாதையாக இருப்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. இதனால் சில சமயங்களில் சந்திரன் பூமியை அண்மித்தும் சில சமயங்களில் சூரியனை அண்மித்தும் இருக்கும். சூரியனை அண்மித்து இருக்கையில் சந்திரனின் கருநிழற் கூம்பு பூமியை தொடாது. இந் நிலையில் கிரகணம் தோன்றுமாயின், சந்திரனால் சூரியனை முற்றாக மறைக்க முடியாது. அச்சமயத்தில் இருண்ட சந்திரனை சுற்றி மெல்லியதான வெளிச்சத்தை சூரியன் பரப்புவான். இந்த நிகழ்வை "கங்கண கிரகணம்" என்போம். இந்த மெல்லிய வெளிச்சப்பகுதி ஒரு காப்புப் போல தோற்றமளிக்கும்.

சூரிய கிரகணமானது அமாவாசை நாட்களிலேயே தோற்றும். எல்லா அமாவாசை நாட்களிலும் சூரிய கிரகணம் தோன்றுவதில்லை. சந்திர கிரகணம் கூட எல்லா பௌர்ணமி தினங்களிலும் ஏற்படுவதில்லை என முன்னர் கூறினேன். இவை ஏன் என அடுத்த தடவையில் பார்ப்போம்.


**RENOVATION**
**KATHIR & ASSOCIATES**




- Complete Basement
- Bath Rooms
- Kitchen
- Plumbing
- Painting

போன்ற உங்களின் சகல விதமான திருத்த வேலைகளிற்கும் அழையுங்கள் : (416)804-5628



மொன்றியால் நகரில் கீழ்வரும் வர்த்தக நிறுவனங்களில் 'உலக தமிழோசை' பத்திரிகையை வாசகர்கள் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறியத் தருகிறோம்.

| | |
|---|---|
| மார்சே மயில் - சோவே - | ☎: (514) 389-5236 |
| மார்சே எமி- -பிளமொன்டன் - | ☎: (514) 731-5368 |
| மார்சே மாருதி - ஜன்தலோன் - | ☎: (514) 270-9511 |



**உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன்**



கனேடிய அரசின் கல்விக்கான மானியம் $400 இலவசம்!

★ TWO YEAR DIPLOMA program ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.



- அரச அங்கீகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம்.(R.E.S.P)
- உலகின் எங்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.
- இன்னும் பல சலுகைகள் உண்டு.

இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு - **சீலன் .A**

***The Children Education Trust of Canada***

*Tel: (416) 451- 0271 pager: (416) 980-9836*



**KD FINANCIAL SERVICES**

**Vamadevan Jeyamohan (Jey)**
**(President)**
**Royal Bank Approved Third Party Referral Agent**

**VISA CARDS UPTO $5000**

புதியவர்கள் (Fresh Credit) அல்லது நல்ல நிலையில் கிறடிற்றை (Good Credit History) வைத்திருப்பவர்களிற்கும் வேலை செய்யும் கடிதம் (Employment Letter) உடையவர்களிற்கும் விசா காட் எடுத்துத் தரப்படும்

**Tel: (416) 431-9315** **Fax: (416) 431-2119**
**Cell: (416) 575-8427** **EmailL: Jeys@ica.net**


தொடர்புகளுக்கு: ***weekdays - 5:30pm - 10:00 pm.***

**Nada Jeyadevan Financial Rep.**
**Tel: -(416) 398-4760 10:00Am - 8:00pm**




**V.N.T. AUTO COLLISION**

- Complete Collision Service
- Unibody Frame Straightening
- Under Coating & Rust Proofing
- All Mechanical & Electrical Repairs
- உட்புற வெளிப்புற பராமரிப்பு
- Tuneup & Brakes
- Oil Change & Lubrication
- Insurance Claims
- Free Estimates



**200 FULLER ROAD**
**UNIT #4A**
**PICKERING, ONT.**
**TEL: (905) 426-5136**



THE STATE OF ART WITH UPDATE TECHNOLOGY

**Ultra Graphic®**

*Your Ideas Take Best Shape*

**Graphic Designs**
- Colour Flyers
- Video Covers
- Books
- Invoices
- Certificate
- Magazine
- CD Covers
- Logo
- Menu
- Business Cards
- Labels
- Calanders

**Roll Labels**
- Bar Code Labels
- Product Labels
- Price Tags
- Bumper Stickers
- Address Labels
- Polyester Labels
- Clear Labels

**Other Services**
- Instant Rubber Stamps
- Instant Business Cards
- Foil Stamping
- Wedding Cards
- Laser Color Print (81/2" x 11")
- Scanning
- Wedding Greetings (11" x 17")

**All Your Signs Needs**
- Banners
- Window Signs
- Truck Signs
- Store Front Signs
- A- Board Signs
- Channal Board
- Neon Signs

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

**Tel: (416) 282-5859**

*e-mail: ultrag@yesic.com*

## நடிகர் திலகத்திற்கு மேலும் ஒரு சிறப்பு விருது

நடிகர் திலகம் - டாக்டர் - செவாலியே சிவாயி கணேசன் அவர்களுக்கு கலைச்சேவையைக் கௌரவிக்குமுகமாக 1999 ஆண்டுக்கான ஆந்திர மாநில அரசின் கௌரவவிருதான என்.டி.ராமராவ் பெயரில் வழங்கப்பெறும் "என் டி ஆர்"விருது இம்மாதம் (ஜனவரியில்) ஹதராபாத் நகரில் ஆந்திர அரசு, சிவாயி அவர்களுக்கும் - இசைப்பணிக்காக பிரபல பிண்ணனிப்பாடகி லதா மங்கேஸ்கர் அவர்களுக்கும் வழங்கிக் கவிரவித்தது.

**T. S. AUTO**

MOTOR VEHICLE SPECIALISTS

SPECIALIST TOYOTA HONDA

**FOR COMPLETE AUTO WORKS AND DETAILING**



உள்ளூர், இறக்குமதி செய்யப்பட்ட சகல ரக வாகனங்களுக்கும் அனுபவம் வாய்ந்த மெக்கானிக்குகளால் சிறந்த முறையில் திருத்திக் கொள்ள நாடுங்கள்

- We Sell Quality Used Cars
- Licensed Mechanics on duty
- Guaranteed Services
- Reasonable Rates
- Free Visual Inspection and Proper Advice
- Licensed to do Air Condition Services
- We Rebuild Alternators & Starters
- Rust Proofing

TUNE - UP •
BRAKES •
GENERAL MAINTENANCE •
ELECTRICAL WORKS •
ALL KIND OF REPAIRS •

OIL & FILTER CHANGE WITH CASTROL GTX

FINCH AVE. E
N
MARKHAM RD.
T.S.AUTO

**Call: Kumar**

**Tel: (416) 293-3395 (416) 891-2893**

2305 Markham Road #24, Scarborough, Ont. M1B 2W3

**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை!**



வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?

முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள் பின் இவரை அழையுங்கள்

எஸ்.கே.தீசன்
S.K.Theesan

**416-631-6322**

CRIMINAL கிறிமினல் வழக்குகள்

DOG BITES

SLIP & FALL

**ரதீக்கா நகை மாளிகை**

- உங்கள் விருப்பமோ குறைந்த விலையில் வாங்குவது, எங்கள் விருப்பமோ இனிமேல் யாரும் குறைக்க முடியாத விலையில் தருவது
- உங்கள் விருப்பமோ குறித்த தவணையில் பெறுவது, எங்கள் விருப்பமோ ஒருநாள் ஏனும் முந்தியே தருவது
- உங்கள் விருப்பமோ இந்த நகைகளை எங்கே வாங்கியது என நண்பர்கள் கேட்பது, எங்கள் விருப்பமோ ரதீக்காவில் வாங்கியது என நீங்கள் பெருமையுடன் சொல்வது
- தாலிக்கும் நகைகளுக்கும் ஓடர் கொடுத்தாச்சு, காரை எடு இனிக் கூறை அலுவலைப்பார்ப்பம் என்று அலைய வேண்டாம். ரதீக்கா நகைமாளிகையும் மஞ்சுளா பஷனும் ஒரே இடத்தில்.
- இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட மிகப்பிரமாண்டமான காட்சியறையில் ரதீக்கா நகைமாளிகை உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

ரதீக்காவின் புதிய விலாசம்



**RATHICKA JEWELLERY**

5635 Finch Ave. East, Unit 3, (Finch and Tapscott)
Scarborough, Ontario, M1B 5K9, Canada

**Tel: (416) 299-1343**



**J DAYCARE**

- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர்
- TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00

தினசரி நடவடிக்கைகள்-: உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு: Mrs. S.J. சௌந்தரநாயகம் **(416) 502-3033**

*(Finch/Birchmount) 151 Lamareaux Dr., TownHouse 99A, Scarboro, Ont. M1W 2J9*

## நிதியும் மூலதனமும்

1. R.R.S.P ல் சேமிப்பதற்கான கடைசி நாள் பெப்ர. 29, 2000. ஆகவே இறுதி நாள் வரை பொறுத்திராது முற்கூட்டியே சேமிப்பை ஆரம்பித்து Compound Effect னால் வரும் பெரும சேமிப்பை அடைவதே சிறந்ததொன்றாகும்.

இதோ சில காரணங்.கள் Canada ல் சேமிப்பதற்கு:

முதலாவதாக (Competitive Advantage)

1. உங்களுக்கு தெரிந்ததொன்றில் நீங்கள் Invest பண்ணுவது சிறந்தவழியாகும். அதாவது நீங்கள் Canada வில் இருக்கிறீர்கள், வேலை செய்கிறீர்கள். பத்திரிகையில் Economy எப்படி என இலகுவாக அறியக்கூடியதாக இருக்கிறது.
2. கனடாவின் Stocks, US Stocks லும் பார்க்க விலை குறைந்ததாகவும் அதன் Return ம் அதன் Economy ம் பலமாக உள்ளது.
3. வெளிநாட்டு Investors கனடாவில் இருக்கும் சேமிப்பை அதிகரித்து கொண்டு வருகிறார்கள்.
4. T.S.E 300 இல் ஒரு சில Company கள் மிக சிறந்ததாக இருந்தாலும் எத்தனையோ சிறிய சிறந்த Company கள் பல பிரிவுகளிலும் உள்ளன.
5. Comodity பெறுமதியும் உலகபொருளாதாரமும் நல்ல நிலை அடைந்துகொண்டு வருவதாலும் வளங்கள் (Resource) சம்பந்தப்பட்ட கம்பனிகளின் பங்குச் சந்தை அதிகரித்துக் கொண்டு வருகின்றது.
6. கனடாவின் நிறுவனங்கள் தங்களுடைய வியாபாரத்தையும் செயல்பாடுகளையும் பல நாடுகளிலும் செய்து வருவதனால் உலகரீதியாக எமது பணம் முதலிடப்படுகின்றது.

CALL FOR MORTGAGE LOAN AND INVESTMENT DIRECT
*Jay Ahamparam -416-498-4743*


**INCOME TAX**

உங்களுக்குரிய பணத்தை விதிகளுக்கமைய மீளப்பெற அழையுங்கள் - **LINGAM**

**Tel: (416) 287-9818**


**SCARBOROUGHH, ETOBICOKE**

**STORM DOOR ! STORM DOOR !**

**உங்களுடைய வீட்டின் நுழைவாசல் கதவு பனியினால் பாதிக்கபடுகின்றதா?**

**STORM DOOR**

அமைத்திடவும், இருப்பதை திருத்திடவும், உங்கள் வசதிக்கேற்ப அமைத்திடவும்...



உகந்த அளவுகள் !

தரமான அமைப்பு !

குறைந்த செலவு !

தரமான வேலைப்பாடு !

இலவச ஆலோசனைகள் !

**உங்கள் தேவைகளுக்கு அழையுங்கள்**

**(905) 790-2902 (905) 676-9741**

RENOVATIONS FURNITURE

YOU NEED FOR YOUR HOME IMPROVEMENT

**SABESAN'S**

EVERYTHING UNDER ONE ROOF



மிகவும் மலிந்த செலவில் உங்கள் வீட்டுத் திருத்த, நிர்மாண வேலைகளுக்கு உடன் நாடுங்கள்

CALL US FOR FREE ESTIMATE

VISIT OUR SHOW ROOM

**EVERYDAY LOW PRICE**

ஒரு முறை விஜயம் செய்தால் மீண்டும் மீண்டும் உங்களை அழைக்கும்!

6 Chairs + Table 7pc DINING SET $229

6pc BED ROOM SET $599

6pc BED ROOM SET $649

3pc WALL UNIT $399

6pc KIDS BED ROOM SET $299
Bed drawers & Foot board extra

9pc ITALIAN SOLID WOOD DINING SET BEST BUY

limited time 7pc ITALIAN DINING SET BEST BUY

limited time 6pc ITALIAN BED ROOM SET $1250 BEST BUY

From $279 BUNK BED

ON SALE - all Appliances FRIDGE, STOVE, WASHER, DRYER, DISHWASHER.

3pc SOFA SET From $449

3pc ITALIAN LEATHER SOFA SET

தாங்களே Basement செய்து ...ளவதாயின் அதற்கான சகல ...பாருட்களும் கொடுக்கப்படும்

Kitchen Cabinet
Windows & Doors

Full Basement Work 3-5 கிழமைக்குள் முடிக்காவிட்டால் நாளொன்றுக்கு $100 வீதம் நாம் தருவோம்!

all MATTRESS on SALE (Nice Selection Available)

Carpet/Ceramic Tiles FROM .99/s.ft
Minimum 300 sq.ft
FREE Under Pad & Installation

TILES CERAMIC FLOOR TILE (6"x 6") from $1.26 /s.ft

TILES WALL TILE from $0.22 /pc

HARD WOOD FLOOR PARQUET $3.99 /S.FT (SUPPLIED + INSTALLED) Min. 250 s.ft STRIPWOOD Available too

Attention உங்கள் கவனத்துக்கு!

PAINT MADNESS SALE
(Latex Flat, Semi Gloss, Oil, Primer. ETC)
Latex Flat From $7.99/gal
First Come First Served, Limited Stock.
Gallon or 5 gal Pale available
அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்.

PAINT UNBEATABLE PRICE FROM $7.99/Gal with Min. 5 Gal. pale purchase

390 Progress Av. Unit. 4,
(N/W Corner of Brimley & Progress)
Scarborough, ON

We Open Tuesday to Friday 11 - 8 p.m., Sat. 11 - 6 p.m., Sun. 11 - 5 p.m. Monday - CLOSED

**ANICKO INTERIOR INC.**
**(416) 562-9090**
**(416) 605-1990**

CASH & CARRY ITEMS, PAINT, WALL PAPER, RUGS, CARPET, TILES etc..
VERY SPECIAL DEALS ON BASEMENT, WASHROOM, KITCHEN, RENOVATION AND FURNITURE & MUCH MUCH MORE...

**கலைமகள் புத்தக நிலையம்**

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

# "ராசம்மாவின் ராஜ்யம்"



நகைச்சுவைத் தொடர்...(15) ~கலகலப்பு தீசன்~

☺சிரிக்க ☺சிந்திக்க

## தண்டனைகளும் தவிப்பும்

எங்களுக்கு இப்படி நடந்துபோச்சே!
அதாவது இன்னொருவருக்கு ஏற்கனவே நடந்தது உங்களுக்கு தெரியும்.
தண்டனை பெற்றவர்கள் தவிக்கும் தவிப்புகள்

**1999ல் சட்ட விடயத்ததில் பலவித மாற்றங்கள்.**

★ *குடிபோதையில் வாகனம் ஓட்டி லைசென்ஸ் இழந்தவர் எத்தனைபேர்?.*

★ *உயிர் இழந்தவர் எத்தனைபேர்?.*

★ *அங்கவீனர்கள் எத்தனைபேர்?.*

★ *வாகன விபத்தின் போது தலையில் காயப்பட்டு இன்னும் பழைய நினைவுகள் திரும்பாதவர் எத்தனைபேர்?.*

நீதிமன்றத்தில் தண்டனை கிடைத்தாலும் அதனால் ஒருவன் அடையும் தவிப்பு... மனக் குழப்பம் நிவர்த்தி செய்ய முடியுமா?

நாய் கடித்து பாதிக்கப்பட்டவர்கள்

உணவு வினியோகம் (delivery) செய்பவர், அதிகாலையில் பத்திரிகை போடுபவர்கள் அல்லது வீடுகள் உள்ள பகுதிகளில் விளையாடும் போது அயலவர்களின் நாய் கடித்தவர்கள் எத்தனைபேர், முகத்தில் காயம், சில நாய்களால் கடித்து குதறப்பட்டவர்கள் எத்தனை பேர்? (பத்திரிகைகளில் நாய் கடித்து இறந்தவர்கள் பற்றியும் அறிந்திருப்பீர்கள்)

உடன் இது சம்பந்தமாக யாரும் சட்ட நடவடிக்கை எடுக்கக் தவறக்கூடாது.... வெறியுள்ள நாய்கள், நோயுள்ள நாய்கள் கடித்தால் அதன் பாதிப்பிலிருந்து நீங்கள் மருத்துவ சோதனைகள் செய்ய தவறக்கூடாது.

(3) **இதுவரை சமூகசேவைப் பணம் மோசடி.**



(1) வேலை செய்து கொண்டு அந்த வேலையில் அதனை அறிவிக்காது சமூக சேவைப் பணம் பெறுதல்.

(2) கணவன் மனைவியாக இருந்து கொண்டு (பொய் தகவல் கொடுத்து) தனித்தனியாக சமூக சேவைப் பணம் பெறுவது.

(3) வாகன விபத்தில் பணம் பெற்று (வருமான இழப்பு) அதனை அறிவிக்காமல்விடுதல்.குறிப்பாக ஒரு சொல்லில் மோசடி என குறிப்பிடலாம்.

புதிய சட்டத்தின்படி அதாவது ஏப்பிரல் 2000ல் மோசடி செய்தவர் என கணிக்கும் பட்சத்தில் அவர் தொடர்ந்து (வாழ்நாளில்) சமூகசேவைப்பணம் பெற முடியாது என குறிப்பிடப்படுகிறது.

பொங்கல் அமளி முடிந்தாலும் உலகர் மனம் தொடர்ந்து பொங்குகியது.
ராசாத்தி உவருக்கு
யன்னல்லை நிண்ட சீதை பார்த்து சிரிக்க, கஸ்டப்பட்டு ராமர் விலா எலும்பு நோக வில்லை உடைக்க காரணம் - காதல்

கம்பரின் மகன் அம்பிகாவதி அரசன் மகள் அமராவதியை காதல் கொண்டு நிலை மறந்து போட்டியில் பாடலை மாறி எண்ணியதால் உயிரிழந்தான் காரணம் - காதல்



பலரை முடி துறக்க வைத்தது - காதல்

பலரின் முடி கொட்ட வைத்தது - காதல்

இவ்வளவு படிச்சும் நீயும் அப்படியே நிக்கிறியே என உலகர் ரூபனைப் பேச ரூபன் சற்று சிந்திக்க தொடங்கினான். 3 தடவை பெயில் விட்டு 3வது தடவையாக பரீட்சை எழுதியபோது கூட ரூபன் சிந்திக்கவில்லை.

ரூபன் சிந்திக்க தொடங்கியது ரூபியின் மனத்தில் மிலேனியத்துக்கு வாங்கிய பொருளை விற்கமுடியாதவன் திகைத்து திணறுவது போல ஒரு பிரமை.

தன்னிச்சிசையாக வாழும் ஒருத்தன் யாருடைய புத்திமதி கேட்டு சிந்தித்து செயல்பட தொடங்கினால் சூழ உள்ள பலருக்கு அது பிடிப்பதில்லை.

ரூபன் உலகரை கடைக்கண்ணால் பார்த்தான். தந்தை ஸ்தானத்தில் இருந்து இன்றுதான் உருப்படியாக சில விளக்கம் தந்திருக்கிறார். உதை முதலே சொல்லுற மாதிரி சொல்லியிருந்தால் உந்த கல்யாண கலாட்டா வந்திருக்குமா கடைக்கண் பார்வையிலேயே உலகரும் ரூபனும் பல அர்த்தங்களை பரிமாறிக் கொண்டனர். ஏதோ புத்தகத்தை திருப்பிக்கொண்டிருந்த ரூபி ஹாய் ரூபா... என... சடக்கென விழுந்தடிச்சு...
என்ன பிள்ளை ரூபா....டொலர் எண்டு கூப்பிடேக்குள்ள பண்பாட்டிலை நனைந்தவ மாதிரி நாணிக் கோணி.... எங்கை நிற்கிறீர் ரூபன் என, தாள லயத்தோட சொல்ல அவனும் எனக்கு மதிப்பு தருவான் என அவ்வை சண்முகி கமல் போல நடித்துக்காட்டினா ராசாத்தியக்கா.

நெவர்...
கொதித்து மனதில் வந்த சொல்லை சுவிங்கம் சப்புவது போல நுனிநாக்கில் அமிழ்த்திய ரூபி பனியில் நனைந்தாலும் நனைவேன் உங்கள் பழைய பண்பாட்டில் நனைய மாட்டேன் என்று வீர வசனத்தை மனதுள் மனனம் செய்து கொண்டாள். ஆனால் ரூபனுக்கு நிச்சயம் தெரியும் ரூபி என்ன நினைப்பாள் என்று.

## வெனிசுலா

(1ம் பக்க தொடர்ச்சி)

உள்ள இந்நாட்டில் இருபத்தியொரு மாநிலங்களும், மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி, அமைச்சரவை என நிர்வாகங்கள் நடைபெறும்.
சுமார் ஐம்பத்திஆறு தினசரி பத்திரிகைகள் இங்கு வெளிவருகின்றது.

பெற்றோலியம், எண்ணெய் பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதில் கணிசமான அளவு தேசிய வருமானத்தினை பெற்றுக்கொள்கின்றது.

போதைவஸ்து பொருட்கள் உற்பத்தி செய்து சர்வதேச சந்தையில் விற்பனை செய்வதில் இந்நாடு கணிசமான அளவு ஈடுபட்டாலும் கொலம்பியா மாதிரி இல்லை.

தலைநகரான 'கராகஸ்' நகரில் சற்று வசந்தகால குளிர் போன்ற நிலைமை தென்படும். மலைப் பகுதிகளில் குளிர் சற்றுக் கூடுதலாக இருக்கும்.


ஃ கிரகப் பொருத்தம் பார்த்தல்
ஃ சுபமுகூர்த்தம் கணித்தல்
ஃ சாதகக் குறிப்பு கணித்தல்
ஃ பலன் பார்த்தல்
ஃ எண் சோதிடப்படி ஆலோசனை கூறுதல்



☎: 299-8361

Compu Service
COMPUTERS & NETWORK



(416) 399-3235 - (905) 432-2422
CONTACT - ALAN SIVA
@ (416) 431-3753
(416) 438-4357
(416) 399-3235

COMPUSERVICE
International

COMPUTER SALES
NEW & USED
NETWORK DESIGN
& INSTALLATION
(905) 432-2422

REPAIRS
UPGRADES
CD BACKUPS
SOFTWARES
*FAX: (416) 431-5828
Email: compuservice@pathcom.com

EZ DRIVING SCHOOL

நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்



JEYAKUMAR © (416) 283-4100
Cell: 822-6741 (10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)

RAAJ WATCH WORK



சகல விதமான மணிக்கூடுகளும் (Watch & Clock) குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாபனம்.
NATHAN ☎: (416) 265-5580
2885 LAWRENCE AVE. EAST, BRIMLY/ LAWRENCE (Close to Biway)


ராசாத்தியக்கா தொடர்ந்தா, ராசமக்காவைப் பார்பிள்ளை உலகண்ணையை எதிர்த்து கதைச்சிருப்பாவே. (உலகண்ணை எதிர்த்தால்தானே ராசம்மா எதிர்ப்பதற்கு (எல்லாம் சர்வயனவாக்கெடுப்புத்தான்) என்னைப் பார் அவர் எப்படித்தான் படிப்பு குறைஞ்சாலும் (ராசாத்தியக்கா படித்தது 5ம் வகுப்பு)

தொடரும்...

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

-சிவ பஞ்சலிங்கம்



## பகுதி (23)

### வீதிப்பரீட்சைகள் [Road Test]

வீதிப்பரீட்சைகள் என்பது ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துபவர்களுக்கு இரண்டு வகையாக நடாத்தப்படும்.

கடந்த அத்தியாயத்தில் முதலாவது வீதிப் பரீட்சைக்கும், இரண்டாவது வீதிபரீட்சைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தினை ஆய்வு செய்தோம். இம் முறை இருவீதிப் பரீட்சைகளிலும்" பரீட்சை மதிப்பீடு" பற்றிய விவரங்களை பார்ப்போம்.

முதலாவது வீதிப்பரீட்சையில் பின்வரும் ஏழு தலைப்புகளில் வாகனம் செலுத்துகையின் திறமைகள் மதிப்பீடு செய்யப்படும்.

START (ஆரம்பித்தல்)

ii BACKING (பின்புறமாக நகர்தல்)

iii DRIVING ALONE (நேராக செலுத்துதல்)

iv INTERSECTION/R.R. CROSSING (சந்திகளையும், புகையிரத பாதையினையும் கடத்தல்)

v TURNS (திருப்பங்கள்)

vi PARKING (வாகன தரிப்புகள்)

vii STOP, PARK and START ON A GRADE (நிறுத்துதல், முறையாக வாகன தரிப்பினை மேற்கொண்டுவிட்டு பின்னர் ஒழுங்காக ஆரம்பித்து செலுத்துதல்)

i <u>START (ஆரம்பித்தல்)</u>

(A) UNABLE TO LOCATE /ADJUST /OPERATE SAFETY DEVICES
வாகனத்தின் செலுத்துகையினை ஆரம்பிக்கும் போது அதனுள் உள்ள சகல கருவிகளையும் (Lights, dimmer, switch, horn, de-froster controls, windshield washer and wiper controls etc.) இயங்க வைத்து செயல்படுத்தும் திறமை இருத்தல்வேண்டும்.

(b) Fails to observe - uses mirror only வாகனத்தின் இயந்திரத்தின் செயல் பாட்டினை திறப்பினை போட்டு ஆரம்பித்து வாகனம் நகர தொடங்க முன்பு .குறிப்பாக "கட் புலனாகாத இடங்கள்"(blind areas) என்று வர்ணிக்கப்படும் இடங்களை தோளுக்கு மேலால் தலையினை திருப்பி இரு பக்கங்களிலும் அவதானித்தல் முக்கியமானதாகும். பின்புற, பக்கப்புற கண்ணாடிகளினால் பார்ப்பது போதாது என்றே கருதப்படுகிறது.

(c) Fails to signal/improper signal
நகர ஆரம்பிக்கும் போது சைகையினால் ஏனையோருக்கு அறியப்படல் வேண்டும். இதில் பிழையான சைகை என்று இருக்க கூடாது.

(D) Incorrect use of clutch,/ brake,/ accelerator/ gears/steering
கிளச், பிறேக், அச்சிலறேற்றர், கியர், ஸ்ரயரிங் ஆகியவற்றின் தப்பான பிரயோகங்கள் பற்றி ஆரம்பிக்கும் போதே மேற்கொள்ளும் மதிப்பீடுகள்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் யாவும் ஆரம்பிக்கும் போது மேற்கொள்ளும் மதிப்பீடுகள் ஆகும். இவ்ஆரம்பங்கள் என்பது வெவ்வேறு பரீட்சை நிலையங்களிலும் பல்வேறு நிலைகளில் இருந்து ஆரம்பிக்கப்படுகின்றபோதிலும் மதிப்பீடுகள் என்பது பொதுவானதாகவே இருப்பது வழமையாகும்.

"முதல் கோணல் என்பது முற்றிலும் கோணலாகிவிடும" என்பதே இங்கு ஆரம்பத்தில் தவறுகள் பரீட்சையின்போது விட்டால் பொதுவாக கருத்தில் கொள்ள வேண்டியிருக்கும்.

அதாவது "First impression should not be bad impression" என அவற்றில் குறிப்பிடப்படுவது உண்டு.

ii <u>BACKING (பிற்புறமாக நகர்தல்)</u>

(a) Fails to look around/to rear before/ while backing - mirror only.
பின்புற, பக்கபுற கண்ணாடிகளினூடாக மட்டும் பின்பக்க காட்சிகளை அவதானித்துக் கொண்டு வாகனங்களை பின்னால் நகர்த்துதல் என்பது நகர்த்தும் போதும், நகர்த்த முன்னரும் போதாது. அதாவது தலையினை திருப்பி பின்பக்கமாக அவதானிக்க வேண்டும் என்பதே இங்கு குறிப்பிட வருவதாகும்.

(B) Turn about, control/ steering method/ observation/ vehicle position.

இது முக்கியமாக மும்முறை திருப்பங்களில்
(Three point turn)
பரிசீலனை செய்யும் பகுதியாகும். மெதுவான முறையில் அவதானமாகபின்னோக்கி நகர்தல், பின்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கம் போது உள்ள அவதானமும், கட்டுப்பாட்டுடன் திருப்பு வளையத்தினை உபயோகிப்பதுடன் வாகனம் நிற்கும் நிலைமையின் தன்மை என்றும் இங்கு பரிசீலனை செய்யப்படுகிறது.

(c) Incorrect use of: clutch/brake/accelerator/ gears/ steering.
இவ்வாறு பின்னோக்கி நகரும் போது கிளச், பிறேக், அச்சிலறேற்றர், கியர், ஸ்ரியறிங் என்பன தப்பான முறையில் உபயோகப்படவில்லையா என்பதும் பரிசீலனை செய்யப்படுகிறது.

*மேலதிக தொடர்புகளிற்கு:* ***சிவ பஞ்சலிங்கம்-(416) 321-0999***
*(Professional Licensed Instructor in Car & Class Room)*


BANANA LEAF
Take-out & Catering

Everyday Special
ஆடு, மாடு, புரியாணி — Free வட்டிலப்பம் — $5.50

தினமும் ஸ்பெஷல்

| | | |
|---|---|---|
| செவ்வாய், வெள்ளி | மரக்கறி சாப்பாடு 10 வகை கறியுடன் மத்தராஸ் தாளி (FREE POTATOES PORI) | $4.99 |
| புதன் | புட்டு, முட்டைப்பொரியல், இறால் குழம்பு சம்பல், பருப்பு | $3.99 |
| வியாழன் | 3ரொட்டி, சிக்கன் பாலுண்டி கட்டைச்சம்பல் | $3.99 |
| சனி, ஞாயிறு | மீன் சாப்பாடு, மரக்கறி வகைகளுடன் | $5.50 |
| ஞாயிறு | LampRice | $5.50 |
| திங்கள் | மூடப்பட்டிருக்கும். | |

431 Nugget Avenue, Unit 10, Scarborough, Ont. (Markham & Nugget)
Tel: (416) 609-9247 Pager (416) 600-1030, (416) 704-8208 (24hrs.)



TAMIL INSURANCE CLAIMS CONSULTANT
தமிழில் இலவச ஆலோசனை
வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?
*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு
*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு
*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும்
ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்
ரவி நடராஜா
TEl:(416) 245-6555 Fax: (416) 245 7766
2095 Weston Rd. #201 (South of HWY 401) Toronto Ont. M9N 1X7


iii DRIVING ALONG (நேராக செலுத்துதல்)
இப் பகுதியில் பரீட்சையாளர் நேராக வாகனம் செலுத்துதலும், நேராக வாகனம் செலுத்தும் போது ஒழுங்காக மாறுதலையும் மற்றும் பக்கங்களின் அசைவுகளையும்மதிப்பீடு செய்வார்.

(a) Follow or passes to closely/cuts in too soon
ஒரு வாகனத்தினை பின்தொடரும் போதோ அல்லது பக்கவாட்டில் நகர்ந்து செல்லும் போதோ ஒரு குறிப்பிட்ட இடைவெளி என்பது அவசியமாகும். நெருக்கமானதாக செல்வது என்பது தவிர்க்கப்பட வேண்டியதும், ஆபத்தானதும் ஆகும்.

(B) Improper choice of lane/ straddles lanes/ unmarked road way

வலது பக்கத்தில் உள்ள ஒழுங்கை வாகனம் செலுத்தும் ஒழுங்கையாக

கருதப்படுவதால் இவ் ஒழுங்கையினால் செலுத்த தவறுபவர்கள் பிழையான ஒழுங்கையினால் செலுத்திய தப்புக்கு ஆளாவார்கள். வலது பக்க ஒழுங்கையில் தொடர்ச்சியாக வாகனத்தினை செலுத்துவதற்கு எதுவித தடையும் இல்லையானால் அவர் ஒழுங்கையினூடாகவே நேரடியாக செலுத்த வேண்டும் என்பது கோட்பாடு ஆகும்.

வரையறை செய்யப்படாத ஒழுங்கையினூடாக வாகனம் செலுத்துதல் (straddles lanes/ un-marked road way) தவறானதாகும்.

(c) Fails to check blind-spot/observe properly.
பின் பார்வை, பக்க பார்வை கண்ணாடிகளினூடாக பார்க்கும் போது பக்கவாட்டில் வரும் வாகனங்கள் இவ் கண்ணாடிகளினால் பார்த்துக்கொள்ளமுடியாது. இவைகளையே இது குறிக்கும். இதேநேரம் நீள் பார்வை, பக்கப் பார்வைகள என்பது நேராக வாகனம் செலுத்தும்போது முக்கியமானதாகும்.


(d) <u>Lane change signal</u>
wrong/ early/ not given/ not cancelled
இங்கு பாதை மாறும் போது மேற் கொள்ளும் அறிவிப்பு சைகை என்பது ஒழுங்கானதாகவும், சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் அறிவிப்பினை முடித்துவிட்டு அதனை நிறுத்துதல் என்பதும் சரியாக போக வேண்டியதாகும்.

(E) <u>Right of way observance:</u>
Ped/ self/ other vehicles.
"பாதை முதல் உரிமை" என்பது பாதசாரிகளுக்கு என்றும் முதல் இடமாகவும், அதே நேரம் ஏனைய வாகனங்களில் முதல் உரிமைகளை சரியான முறையில் வழங்குவதனுடன் தமது முதல் உரிமைகளையும் உபயோகிக்க தெரிய வேண்டும்.இப் பாதை முதல் உரிமைகளுடன் "அவதானம்"இருப்பதும் முக்கியமானது.

(f) <u>Fails to ues caution or obey:-</u>
ped cross - overs/ school crossing/ emergency vehicle
நடைபாதைகள், பாடசாலை நடைபாதைகள் ஆகியவற்றில் பாதசாரிகளுக்கு முன்னுரிமைகொடுத்துசெல்வதுடன், அம்புலன்ஸ், தீயணைக்கும்படை, பொலிஸ்வாகனங்கள் ஆகியவை சைகையுடன் வரும் போது அவர்களுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும்.

தொடர்ச்சி 17ம் பக்கம்

# சாரதிகளே!
# TRAFFIC TICKET
# பெற்றீர்களா?




- Speeding
- Stop Sign
- Red Light
- Seat Belt
- Improper Turn

Peter Joseph

- ஒரு முறை அழையுங்கள்.
- உண்மையை உணருங்கள்
- நண்பர்களுக்கும் கூறுங்கள்

- Careless Driving
- Accidents
- Fail to Remain/Report
- Over speed
- Impaired Driving
- Drive under suspension
- Dangerous Driving



**$150** மட்டுமே

புள்ளிகளைக் காப்பாற்றுங்கள்
முற்பணம் தேவையில்லை
நீங்களும் வரவேண்டியதில்லை
தேவை உங்கள் ரிக்கட் மட்டுமே

பல ஆண்டுகள் வெற்றியின் அனுபவங்கள் பீற்றர் ஜோசப்

**Traffic Ticket Specialists**

**Tel: (416) 537-7737 Fax: (416) 537-9035**


## அணு

மூலகம் ஒன்றின் பிரிக்கமுடியாத மிகச் சிறிய துணிக்கைதான் அணு என முதலில் எண்ணப்பட்டு வந்தது. பின்னர் ஆய்வுகளின் விளைவாக அணு என்பது கண்ணுக்குப் புலப்படாத ஒரு சூரியத்தொகுதி போன்றது எனத் தெளிவுபட்டது. அதன்படி இலத்திரன், புரோத்தோன், நியூத்திரன் எனும் மூன்று அடிப்படைத் துணிக்கைகளினால் ஆன அணுவின் மையத்தில் அணுக் கரு காணப்படுகிறது. இவ்வணுக்கருவானது புலோத்திரன்களும் நியூத்திரன்களும் சேர்ந்து காணப்படும் திணிவு கூடிய பகுதியாகும். இவ்வணுக் கருவைச் சுற்றி வெவ்வேறு பாதைகளில் (ஒழுங்குகள்) இலத்திரன் அணுக்கருவை வலம் வருகின்றன. இது சூரியனைச சுற்றி வெவ்வேறு பாதைகளில் கோள்கள் சூரியனை வலம் வருவது போன்றதாகும..

சுமார் 200,000,000 ஐதரசன் அணுக்களை ஒன்றாக வைத்தால் 1 அங்குல நீளம் வரை வரும் அணு எவ்வளவு சிறியதென்று எண்ணிப் பாருங்கள்.

## நிறமாலை

பொதுவாக நிறமாலை என்பது சூரியனின் வெள்ளொளியைப பிரிக்கையில் வரும் ஏழு நிறங்களுமேயாகும். இவற்றின ஒழுங்கு சிகப்பு, செம்மஞ்சள், மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், ஊதா என்பனவாகும். இந்த நிறமாலையை திருசியம் எனவும் கூறுவர். முதன் முதலில் சூரியனின் வெள்ளொளியை பிரித்துக் காட்டியவர் சேர் ஐசாக் நியூட்டன் ஆவர். நிறமாலை அல்லது திருசியத்தின் இயற்கைத் தோற்றப்பாடு வானவில் ஆகும். உண்மையில் திருசியத்தில் உள்ளது ஏழு நிறங்கள் மட்டுமல்ல. ஒழுங்கில் சிகப்பு நிறத்திற்கு கீழேயும், ஊதா நிறத்திற்கு மேலேயும் கூட திருசியம் உள்ளது. இவற்றைச் சென்நிறக் கீழ்க் கதிர்கள், ஊதா கடந்த கதிர்கள் அல்லது பிறஊதாக் கதிர்கள் என்பார்கள். வானவியல் இந்த திருசியத்தின் பயன்பாடு மிகவும் பெரியதாகும். நட்சத்திரங்களின் இயல்புகளை அறிய இந்த திருசியத்தை உபயோகிக்கின்றார்கள்.

## நினைவில் நிலைத்து நிற்கவேண்டியவை

1. நீரில் மிதக்கும் உலோகம் எது? **அலுமினியம்**
2. பூமியின் பரப்பளவிற்கு சமமான கிரகம் எது? **ஜுபிடர்**
3. இரண்டாம் உலகப்போரில் பங்கெடுக்காத நாடு எது? **கனடா**
4. குழந்தைகள் தினம் கொண்டாடப்படும் நாள் எது?
   **நொவம்பர் 14 ஆம் திகதி**
5. கால் பந்தாட்டம் எந்த ஆண்டில் ஒலிம்பிக்கில் ஓர் ஆட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது?
   **1900 ஆம் ஆண்டு**
6. அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டன். அதனை ஏன் வாஷிங்டன் டி. சி. என ஏன் குறிப்பிடுவார்கள்?
   கொலம்பியா மாவட்டத்துடன் இணைந்துள்ள நகரம் வாஷிங்டன். எனவே அதனை வாஷிங்டன் டி.சி. ஏன்கிறார்கள். (டி. சி. என்பது District of Colombia )
7. ஸ்கூபாடைவிங் (Scuwba Diving) என்பதன் விரிவாக்கம் என்ன? **Self Contained Under Water Breathing Apparatus.**
   **கடலுக்குள் மூழ்கும் பயிற்சி**
8. மரங்கொத்தி எவ்வளவு வேகமாக மரத்தை கொத்துகிறது?
   ஒரு மணிநேரத்திற்கு 1300 மைல் வேகத்தில் அதன் தலை அசைவதாக கணக்கிடப்பட்டுள்ளது.
9. ஆசியாவின் வைரம் என்று அழைக்கப்படும் நாடு எது?
   **இலங்கை**
10. முதலாவது குளிர்கால விளையாட்டுப் போட்டி எங்கு எப்பொழுது ஆரம்பமானது?
    **1924ஆம் ஆண்டு, பிரான்ஸ் நாட்டில்**
11. உலகிர் ஒரு நாட்டவர் மட்டும் தங்கள் நாட்டை தந்தை நாடு என்பர், அது எந்த நாடு? **ஜேர்மனி**
12. நீல் ஆம்ஸ் ரோங் இன் முழுப்பெயர் என்ன?
    **நீல் அல்டன் ஸ்ரோங்**
13. வாழ்நாளில் நீர் அருந்தாமல் வாழும் விலங்கினம் எது?
    **Polaur Bear, (போலா கரடி) அவுஸ்திரேலியா**
14. உலகில் தரையில் வாழும் விலங்கினங்களில் மிகப்பெரியது எது?
    **யானை**
15. கணிப்பொறி செய்யப்படும் (I.C.) சிப்ஸ் (Chips) எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?
    **சிலிக்கான் (Slicon)**

தொகுப்பு: *-சீலன் ஜயாத்துரை, seelan y2k@email. com*

# மாணவர் பகுதி



-S.F. Xavier (ஆசிரியர்)



**Answers to Tutorial 46**

January 15, 00

